Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc.*
1711 McCowan Rd. Suite #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

16 வது வருடத்தில்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 16 | பாலம் 14 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 15, 2006

செதுக்கப்பட வேண்டிய கல் 13

நல்ல மனம் வேண்டும் 17

5வது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா செப்ரெம்பர் 16, 2006

மும்பை குண்டு வெடிப்பு

பாகிஸ்தான் சதியா?

மும்பையில் அண்மையில் நிகழ்ந்த தொடர் குண்டுவெடிப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை 200 ஐ தாண்டிவிட்டது. படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் உள்ள 800 க்கும் மேற்பட்டவர்களில் பலரின் நிலைமை ஆபத்துக்கட்டத்தில் உள்ளது.

இதே நேரம் மும்பை குண்டுகள் வெடித்த உடன் பாக்கிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கும் தொலைபேசி மூலம் உடனடியாக தொடர்பு கொண்டு முக்கிய விடயங்களைப் பற்றி சில நபர்கள் பேசியுள்ளனர் என்று இந்திய உளவுத்துறை கண்டுபிடித்துள்ளது.

அதே சமயம் யார் இந்த நபர்கள், எந்த இடத்தில் இருந்து, எந்த தொலைபேசியை பாவித்தார்கள் போன்ற எந்த விடயத்தையும் உளவுத்துறை வெளியிடாமல் இரகசியமாக வைத்துள்ளது.

குண்டு வெடிப்பை நேரில் பார்த்தவர்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டு குண்டுவைத்தவர்கள் என சந்தேகிக்கப்படும் ஆறுக்கும் மேற்பட்டவர்களின் உருவப்படங்கள் வரையப்பட்டு அவர்களைத் தேடும் பணியும் நிகழ்கின்றது.

இந்நிலையில் 13 பேர் இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக கைதாகியுள்ளனர். இந்தக் குண்டுவெடிப்பு சம்பவத்துடன் சில அரசியல் வாதிகளும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும், அவர்களை புலனாய்வுத்துறை தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

G8 நாடுகளின் சந்திப்பு

உலகிலுள்ள பொருளாதார ரீதியில் பலமிக்க எட்டு நாடுகளின் சந்திப்பு இம்முறை ரஸ்யாவிலுள்ள St. Petersburg இல் யூலை 15 தொடக்கம் யூலை 17 வரை நடைபெறுகின்றது. இம்முறை ரஸ்ய அதிபர் விளாடிமர் பூட்டின் (Vladimir Putin) இதற்கு தலைமை தாங்குகிறார்.

எரிபொருள் வாயுவின் விலை அதிகரித்துச் செல்லும் இந்தக் கால கட்டத்திலும் மத்திய கிழக்கின் நிலைமை ஒரு முழு யுத்தத்தை நோக்கி போய்க்கொண்டு இருக்கும் நேரத்தில் இந்தச் சந்திப்பு நிகழ்கின்றது.

G8 ஆரம்பித்த காலத்திலிருந்து இம்முறை, முதல் தடவையாக ரஸ்யா தலைமை தாங்குகிறது. எனவோ விளாடிமர் பூட்டின் இதற்கு தலைமை தாங்குகிறார்.

கனடிய பிரதமர் தனது உரையில் கனடா "ENERGY SUPER POWER" என அழைக்கவேண்டும் எனக்கேட்டுக்கொண்டார்.

உலகிலுள்ள பொருளாதார ரீதியில் ஸ்திரமும் கனதியுமுடைய எட்டு நாடுகளை இணைத்து G8 என்று அழைக்கப்படுகிறது. இந்த நாடுகள் முறையே அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி மற்றும் ரஸ்யா ஆகும்.

இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாக உலகிலுள்ள நாடுகளில் எழும் பொருளாதா, அரசியல் நெருக்கடிகளை நீக்குவதற்கு உதவுவதாகும்.

1975இல் ஆரம்பிக்கும்போது இவை G6 நாடுகளைக்கொண்டு இருந்தன. அடுத்த வருடம் கனடா சேர்ந்து கொண்டது. 1997இல் ரஸ்யா சேர்த்துக்கொள்ளப்பட்ட போதும் 1977இலிருந்து ஐரோப்பிய யூனியனின் தலைவரும் கலந்து கொள்வது வழமையாகக் காணப்படுகின்றது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

HOLMAN
Insurance Brokers LTD.

Balan Kanapathipillai, R.I.B. (ON)

• Auto • Commercial • RESP
• Home • Life • RRSP
416.321.1515 • 416.452.6975
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc., Brokerage *
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055

HomeLife/GTA Realty Inc. Brokerage*
Bus: 416-321-6969
#206 - 1711 McCowan Rd.,
Scarborough, ON.

THINKING OF BUYING / SELLING

HomeLife GTA Realty Inc., Brokerage *
Jeyanthi Sritharan
Sales Representative
416-918-5872
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வெற்றிகரமாக நடந்தேறிய பட்டதாரிகள் சங்கத்தின் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டல் பட்டறை - 2006

(Employment Guidance Workshop for Graduates of Sri Lankan Heritage - 2006)

சென்ற சனிக்கிழமை யூலை 8ம் திகதி காலை 10:00 மணி முதல் பி. ப. 2:00 மணி வரை கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் தமிழ்ச் சமூகத்திலுள்ள பட்டதாரிகளின் நன்மை கருதி "பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டல் பட்டறை" ஒன்றை ஸ்காபரோ சிவிக் நிலையத்தில் வெற்றிகரமாக நடத்தியது.

கனடாவிலோ, இலங்கையிலோ அல்லது வேறோரு வெளிநாட்டிலோ பட்டம் பெற்ற இலங்கைப் பட்டதாரிகள் கனடாவில் தங்களது துறைகளுக்கு ஏற்ற தொழில் பெறுவதற்கு எப்படித்தங்களைத் தயார் பண்ணவேண்டும், தொழில் துறைகளுக்கு ஏற்ப என்னென்ன பயிற்சிநெறிகளைக் கற்க வேண்டும். எங்கெங்கே மேலதிக தகவல்களைப் பெறுவது, தகுந்த தொழில் வாய்ப்புக்களை எப்படி உருவாக்குவது போன்ற விடயங்களைப் பற்றிப் பல பிரயோசனமான தகவல்களைப் பரிமாறினர். சங்கத்தின் தலைவர் ப. கனகரத்தினம் தனது வரவேற்புரையில், சங்கம் பட்டதாரிகளுக்குப் பயன் கொடுக்கும் பொருட்டு நடத்தும் நிகழ்ச்சிகளில் இப்பட்டறையும் ஒன்றென்றும், உலகில் எப்பாகத்திலும் பட்டம் பெற்ற இலங்கைத் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு எந்த உதவிகளையும் செய்யச் சங்கம் தயாராக உள்ளதென்றும் கூறினார். அவர் இந்நிகழ்ச்சிக்கு அனுசரணை வழங்கிய றோயல் வங்கி ஈட்டுக்கடன் பகுதியைச் சேர்ந்த வின்சன்ற் சின்னத்துரை அவர்களுக்கும், யாழ். மெற்றல் ஸ்தாபன அதிபர் வை. சொர்ணலிங்கத்திற்கும் நன்றியைத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பட்டறை ஒருங்கிணைப்பாளர் கலாநிதி தெய்வேந்திரராஜா பட்டறை பற்றிய விவரங்களை வழங்கினார். முதலில் A.C.C.E.S நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஷே ாண் மின்ஸ் (Shawn Mintz) அவர்கள் தங்கள் நிறுவனத்தில் பட்டதாரிகளுக்காக நடைபெறும் பயிற்சி நெறிகள் பற்றியும், கனடிய அநுபவம் பெறுவதற்கு செய்யப்படும் ஒழுங்குகள் பற்றியும் விவரித்தார். அத்துடன் வேலை தேடுவதில் என்னென்ன முறைகள் பின்பற்றப்பட வேண்டும் எடுக்கப்படும் நடவடிக்கைகளில் மேற்கொள்ள வேண்டிய எச்சரிக்கைகளையும் அவர் சிறப்பாகக் கூறினார். அவரைத் தொடர்ந்து Skills For Change நிறுவனத்தைச் சேர்ந்த திரு. டேவிட் லவ்லொக் (Dave Lovelock) அவர்களும் தாங்கள் நடத்தும் பட்டதாரிகளுக்கான பயிற்சிநெறிகளைப் பற்றிய விவரங்களை எடுத்துரைத்தார். நேர்முகப் பரீட்சைக்குத் தயார் பண்ணுவது பற்றியும் விளக்கினார்.

இந்நிகழ்ச்சிக்குச் சிகரம் வைத்தாற்போல், தற்போது நல்ல பதவிகளில் வேலை பார்க்கும் ஈழத்தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த இலங்கைப் பட்டதாரிகள் பலரும் இதிற் கலந்து தங்களது அநுபவங்களையும் பகிர்ந்து அறிவுரைகளையும் வழங்கினார்கள். இதனுள் கனடாவில் பட்டம் பெற்றவர்கள் பலரும் அடங்குவர். வழக்கறிஞர் ஜுட் அந்தோனிப்பிள்ளை, கணினிப் பொறியியலாளர் கோபி பாலசிங்கம், பேராசிரியர் இ. பாலசுந்தரம், மருந்தகத்துறை நிபுணர் எஸ். கேசவமூர்த்தி, ஆசிரியர் கலாநிதி வி. மணிவண்ணன், ஆசிரியர் பிரதீப் ராஜா, சிவில் பொறியியலாளர் சி. இராமநாதன், வங்கி அதிகாரி பிலிப் சபாபதிப்பிள்ளை, மின்னணுத்துறைப் பொறியியலாளர் எல். சசீதரன், இயந்திரத்துறைப் பொறியியலாளர் வை. சொர்ணலிங்கம், மின்னணுத்துறைப் பொறியியலாளர் பா. சுரேந்திரன், வணிகத்துறை வல்லுனர் றோஷ் ன் திருநாவுக்கரசு, கணக்காளர் விக்கி விக்னராஜா ஆகியோர் இக் குழுவில் இருந்து அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அத்தோடு பட்டறையில் கலந்து கொண்ட பட்டதாரிகளின் கேள்விகளுக்கும் இவர்கள் உற்சாகமாகப் பதில் கொடுத்துதவி ஊக்குவித்தனர்.

சங்கத்தின் செயலாளர் சி. இராமநாதனின் நன்றியுரையுடன் முடிவடைந்த இச் சிறந்த பட்டறைக்கு வந்திருந்த பட்டதாரிகள் நல்லதொரு வேலையைப் பெறுவோம் என்ற நம்பிக்கையான மனத்திடத்துடனும், பிரயோசனமான பல தகவல்கள் பெற்ற
மகிழ்ச்சியுடனும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர். அதேபோல் பட்டதாரிகள் சங்கமும் சமூகத்திற்குத் திறைமையாக ஒரு பட்டறையைச் செய்து முடித்த ஆத்ம திருப்தியுடன் வீடு திரும்பினர். அங்கு நடைபெற்ற நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.

உடல்நலம் பற்றிய கவனக்குறைவும் நோய்களும்

உடல் ஆரோக்கியமாக நோயின்றித் திகழ நாம் முக்கியமாகப் பின்பற்ற வேண்டியது உணவுப்பழக்கம். நாம் உண்ணும் உணவுதான் நமது ஆரோக்கியத்திற்கு உதவுகிறது. அதை முறைப்படுத்தி உண்பதால் பல நோய்களில் இருந்து தப்பலாம். நம்மில் பலர் உணவுக்கு முக்கியமளிப்பது கிடையாது. ஏதோ கடமைக்காகவும், ருசிக்காகவும் புசிக்கிறார்களே தவிர அதில் ஒழுங்குமுறைகளைக் கடைபிடித்து, சத்தான உணவு முறைகளைத் தேர்ந்தெடுப்பது கிடையாது. எவ்வளவோ விஞ்ஞான முன்னேற்றம் அடைந்தும் தன் சக்திக்கு மீறிய அதிகமான விடயங்களைத் தெரிந்துகொள்வதில் உள்ள ஆர்வம் தன் உடலை பற்றியும், உண்ணும் உணவு முறை பற்றியும் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவது இல்லை. நோய் தடுக்கும் முறைகளுக்கும், உடலுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கும் பெரும்பான்மையான மக்கள் வைத்தியரிடம் சென்றால் குணப்படுத்தி விடுவார் நமக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்ற மனநிலையில் தான் இருக்கிறார்கள். அல்லது மருந்து கடைகளில் சென்று கடைக்காரர்களிடம் வியாதி சொல்லி ஏதோ மாத்திரைகளை வாங்கிச் சாப்பிட்டு பொறுப்பற்ற முறையில் தங்கள் உடல்நலத்தை கெடுத்து கொள்கிறார்கள். தொடக்க நிலையில் அதை நிவர்த்தி செய்து கொள்ள கவனம் செலுத்தாமல் பின்பு அவதிப்படுகிறார்கள். பிணிகளை எளிய வழிகளில், போக்கி நலமுடன் வாழத் தெரியாமல் அறுவை சிகிச்சை செய்து கொண்டு அவதிப்படுகின்றனர். உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் இயற்கைக்கு உட்பட்டு நடந்துகொண்டு வாழ்ந்து வருகிறது. ஆனால் மனித இனம் மட்டும் இயற்கைக்கு விரோதமாக நடந்துகொண்டு பல துன்பங்களை விலைக்கு வாங்கிக்கொண்டு அல்லல்படுகின்றது.

நீண்ட ஆயுள், குறைவற்ற செல்வம், நோயற்ற உடல், இனிமையான குடும்பம், தெவிட்டாத பேரின்பம் விரும்பும் மனிதன் தன்னுடைய இயற்கைக்கு புறம்பான நடத்தையால் அனைத்தும் இழந்து தவிக்கும் நிலை ஏற்படுகிறது. காரணம் அறியாமை, அலட்சியம், பொறுப்பற்ற தன்மை, சரியான நேரத்தில் சரியான சிகிச்சை மேற்கொள்ளாது இருத்தல். வசதியின்மை,

மற்றவர்களால் ஏமாற்றப்படுதல், மருத்துவர்களின் பொறுப்பற்ற செயல்கள், நாகரிகம் என்ற பெயரில் தன்னை தானே ஏமாற்றிக் கொண்டு இருக்கும் மக்கள் எளிய மருத்துவ முறைகளை விட்டு மற்றவர்கள் பேச்சை கேட்டு சக்திக்கு மீறி உயர்ந்த மருத்துவம் என்ற பெயரில் ஏமாறுதல் போன்றவை. நமது முன்னோர்கள் தங்களது நோய்களுக்கு அன்றாடம் பயன்படுத்தும் உணவுப் பொருட்களை முறைப்படுத்தும் மூலிகை மருத்துவத்தின் மூலமும் மற்றும் உபவாசம், பிரார்த்தனை, யோகாசனப் பயிற்சி இவற்றின்மூலமும் ஆரோக்கியமாக வாழந்தார்கள். ஆனால் இன்றைய வாழ்க்கை முறையில் ஆரோக்கியம் என்பது கேள்விக்குறியாக உள்ளது. எதிர்பாராது ஏற்படும் விபத்துக்களை தவிர மற்ற எல்லா நோய்களும் இயற்கை விதிமுறைகளை மீறுவதால் உண்டாவது ஆகும்.

மனித உடல் நலமாக இருக்க வேண்டுமாயின் நுண்ணுயிர்களும், உயிரணுக்களும் முறையாக இயங்க வேண்டும். அப்படி இயங்காதபோது நோய் ஏற்படுகிறது. உயிராற்றல் (பிராணசக்தி) குறைவதாலும், உடலுக்கு தேவையற்ற கழிவுப் பொருட்கள் உடலில் சேர்ந்து விடுவதாலும் நோய் ஏற்படுகிறது. நடைமுறையில் நாம் உபயோகிக்கும் காற்று அசுத்தமடைந்து விட்டது. குடிதண்ணீர் அசுத்தமாகிவிட்டது. உணவு பொருட்கள் அசுத்தமாகி விட்டது. இயல்பான எளிய உணவை உண்ணாததாலும், தூய்மையான தண்ணீரை அருந்தாததாலும், தூய்மையான காற்றை சுவாசிக்காததாலும், தேவையான ஓய்வு எடுக்காததாலும், உடல் உழைப்பு இல்லாமல் இருப்பதாலும், உடற்பயிற்சி செய்யாததாலும், ஒழுக்க நடவடிக்கைகளில் இருந்து மீறுவதாலும் நோய் ஏற்படுகிறது.

உடல் நலத்தைச் சீர்குலைப்பதில் உப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. அதிகப்படியான நீரை உடல் பயன்படுத்த முடியாமல் செய்து விடுகிறது. அதிக உப்பின் மூலம் இரத்த அழுத்தம், ஊளைச்சதை, இளமையிலேயே முதுமை போன்ற வியாதிகள் ஏற்படும். எனவே உடலுக்கு தேவையான தாதுப்புக்களை நாம் உண்ணும் பழங்களில், காய்கறிகளில் இயற்கையாக இருப்பதை நாம் தெரிந்தும் செயற்கை உப்பினால் நோயை விலைக்கு வாங்குகிறோம்.

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

எட்டு வயதுச்சிறுமி திவிக்காவின் அற்புத பரதநாட்டிய அரங்கேற்றம்

பரதக்கலை என்றால் தமிழகத்தின் பிரபல பரதநாட்டிய கலைஞர்களான கலைமாமணி பத்மா சுப்ரமணியம், கலாஷேத்திரா ருக்மணி அருண்டேல், கலைமாமணி சொர்ணமுகி, அடையார் லகஷ்மண் போன்றோர் தான் நமக்கு நினைவு வரும். அவர்கள் அனைவரும் பரதநாட்டிய கலையின் வளர்ச்சிக்கு தங்கள் வாழ்வை அர்பணித்த மாபெரும் மூத்த கலைஞர்கள். அவர்கள் எல்லோருக்கும் இணையாக நமது தாயகத்தைச் சேர்ந்த எட்டே வயது நிரம்பிய ஓர் இளம் சிறுமியான, கலைக்கோவில் நுண்கலைக்குழு கல்லூரி மாணவியான செல்வி திவிக்கா ஜெகலோகேஸ்வரன் அவர்கள், கனடிய மண்ணில் தனது அரங்கேற்றம் மூலம் ஒரு புது கலைச்சரித்திரம் படைத்து விட்டார். தனது அபார திறமையாலும் ஆற்றலாலும் கடந்த வாரம் 7ம் திகதி மார்க்கம் தியேட்டர் கலையரங்கில் வழங்கிய அவரது பரத நாட்டிய அரங்கேற்றம், அவ்விழாவில் பங்குகொண்ட அரங்கம் நிரம்பிய பார்வையாளர்கள் அனைவரையும் வியக்க வைத்து பெரும் பாராட்டுதல்களைப் பெற்று ஓர் அற்புத நாட்டிய வேள்வியாக சாதனை படைத்துள்ளது. பரதக் கலையைத் தோற்றுவித்த பரத முனிவரோ அல்லது ஆடல் வல்லான் நடராஜப் பெருமானோ இச்சிறுமியின் நடனத்தை பாத்திருந்தால், இந்த சிறு வயதில் இத்தனை திறமைகளா? என வியப்பில் ஆழ்ந்திருப்பார்கள். இந்நிகழ்ச்சிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், செல்வி திவ்விகாவின் சகோதரர் செல்வன் கீர்த் அவர்களின் மிருதங்க இசை நிகழ்வும் இடம் பெற்றது முக்கிய அம்சமாகும்.

அந்த அளவிற்கு அனைவரையும் ஆச்சரியப்படுத்திய இவ்வரங்கேற்ற நிகழ்ச்சிக்கு இங்குள்ள பிரபல வர்த்தக வியாபார பிரமுகர்களும், ஊடக வியலாளர்களும், கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளைச் சார்ந்த கலை இலக்கிய சான்றோர்கள் எனப்பலர் சமூகமளித்திருந்திருந்தனர். இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக, கனடா உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் திரு. செல்லையா அவர்களும், சிறப்பு விருந்தினராக தமிழகத்தின் பிரபல மிருதங்கச் சக்கரவர்த்தி, கலைமாமணி திருவாரூர் பக்தவஸ்தலம் மற்றும் மதுரகீதம் இசைக் கல்லூரியின் நிர்வாகி, பிரபல கர்நாடக இசைப் பாடகி கீதா ராஜசேகர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி பாராட்டிச் சிறப்பித்தனர். மேலும் சிறப்பு விருந்தினர்களாக கலைமன்ற இயக்குனர் திருமதி ஸ்ரீமதி நிரஞ்சனா சந்துரு, பிரபல சட்டத்தரணி திரு. மனுவேல் ஜேசுதாசன், இசைக்கு ஏது எல்லை புகழ் திரு. வைரமுத்து சொர்ணலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

கலையரங்கமே ஒரு தெய்வீக உணர்வை ஏற்படுத்தும் வகையில், ஆடலரசன் நடராஜரின் பெரிய திரு உருவச் சிலை அழகுடன் அலங்கரிக்கப்பட்டு, மேடையில் ஒரு பக்கம் இசைக்கலைஞர்களுக்கான மேடை, மங்கள விளக்குகள், மற்றும் நடுவில் தோரணவாயில் போன்ற அமைப்புடன் அழகுடன் காடசியளித்தது.

எந்தவொரு கலைநிகழ்ச்சி என்றாலும், ஒரு கலாச்சார மரபாக கடைப்பிடிக்கப்படும் தமிழ்த் தாய் வாழ்த்து, கனேடிய தேசிய கீதம் ஆகியவற்றை ராகாலயா நுண்கலைக்கூட மாணவி செல்வி சிவகாமி மயில் வாகனம் வழங்கினார். மௌன அஞ்சலியைத் தொடர்ந்து, திரு ஜோதிலிங்கம், மற்றும் ரவீந்திரன் தம்பதியர்கள் மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தார்கள்.

சட்டத்தரணி திரு. கனக மனோகரன் அனைவரையும் வரவேற்று சிறப்புரை நிகழ்த்தினார். பின்னர் அலங்கார பூஷணம், பிரபல சிவாச்சாரியார் சிவஸ்ரீ வாகீஸ்வர சிவாச்சாரியார் அவர்களின் அரங்க பூஜை நடைபெற்றது. பூஜையைத் தொடர்ந்து சிறுமி திவ்விகா கால்களில் அவரது குரு செல்வி வனிதா பேரம்பலத்தினால் நடன சலங்கை கட்டப்பட்டு, குரு, பெற்றோர், அவையோர் ஆசியுடன், இறைவனை வணங்கியதிற்குப் பின்பு, அரங்கேற்ற விழா தொடங்கியது. நிகழ்ச்சிகள் அனைத்தையும், தனது பல்லாண்டு மேடை அனுபவங்களாலும், தங்களுக்கு உள்ள தனித்துவமான இனிய குரல் வளத்தோடு கூடிய இன்பத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தொகுத்து வழங்கிய, கனடாவில் புகழ்பெற்ற CTBC வானொலி நிலைய அதிபர் திரு. இளையபாரதியும், அக்னி இசைக்குழுவின் நிர்வாகிகளான திரு. திருமதி. சில்விய பிரான்ஸிஸ் ஆகியோரின் வர்ணணைகள் அனைத்துமே மிகவும் சிறப்பாக அமைந்தது. விழாவில் பங்குகொண்ட அனைவருக்கும் மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கபட்ட அரங்கேற்ற விழா தொகுப்பு மலர், சிறுமி திவ்விகாவின் பல்வேறு நடன பாவங்களை காட்டும் வண்ணப் புகைப்படங்கள் அச்சிடப்பட்டு அன்றைய நிகழ்ச்சித் தகவல்களாக வழங்கப்பட்டது.

புதுவை இராமன்

திரு. திருமதி. சில்வியா பிரான்சிஸ் மற்றும் திரு. இளையபாரதி ஆகியோர் சிறுமியின் குருவான செல்வி. வனிதா பேரம்பலத்தைப் பற்றியும், அவரது கலைக்கோவில் நுண்கலைப் பள்ளியினைப் பற்றியும், செல்வி. திவிக்காவின் பெற்றோர்களைப் பற்றியும் முன்னுரை வழங்கி, அவையோருக்கு அறிமுகப்படுத்தியதோடு, அரங்கேற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதம, சிறப்பு விருந்தினர்கள், வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்த பிரபலங்களையும் ஆங்கிலத்திலும், தமிழிலும் முறையே அவ்வப்போது அறிமுகப்படுத்தி வைத்தனர்.

நடன நிகழ்வாக தோடயமங்களம் எனும் ஞானசபேசர் தோத்திர நடனம் இடம் பெற்றது. இராகமாளிகையாகவும் தாளமாளிகையாக வும் மங்களகரமான சொற்கட்டைக் கொண்டு, வழுவூர் பாணியை பின்பற்றி முதலில் இடம் பெறும் நடனமாகும். தொடர்ந்து புஷ்பாஞ்சலி நடனத்தின் மூலம் இறைவன், குரு, சபையோர், ஆகியோருக்கும், நடனத்தின் வெற்றிக்கும் செலுத்தும் மலர் வணக்க நடனம் இடம் பெற்று, அதனைத் தொடர்ந்து திஸ்ர அலாரிப்பு நடனம் இடம் பெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பிரதான பக்க வாத்திய கலைஞர்களாகப் பங்கேற்ற நட்டுவாங்கம் செல்வி. வனிதா பேரம்பலம், வாய்பட்டு ஸ்ரீமதி. லசந்தி ராஜ்குமார், மிருதங்கம் ஸ்ரீ கனகேந்திரம் குகேந்திரன், வயலின் திரு. பாலமுரளி, கடம் பரஞ்சோதி நதிரூபன், புல்லாங்குழல் திருமதி. ரேகா ரகுபதி மற்றும் தம்புரா செல்வி. நீபேக்கா நவீந்திரன் ஆகியோர் பார்வையாளர்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டார்கள். தொடர்ந்து ஜதீஸ்வரம் எனும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசம் கொண்ட அலாரிப்பைப் போன்ற நிருத்த வகை நடனத்திற்குப் பின். பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு பிரதான நிகழ்வாகவும், நவரத்தினம் சூட்டிய வகையில் அமைந்த "நவரசம்" நடனத்தைப் பற்றி வர்ணிக்க வார்த்தைகளே போதாது. செல்வி. திவ்விகா, தனது அனைத்து திறமைகளையும், ஆற்றல்களையும், அங்க அசைவுகளையும், முக பாவனைகளையும், வெளிப்படுத்தியது மிகவும் அற்புதமானதாகும். ஒரு நடன நர்த்தகிக்கு இணையாக காதல், சிரிப்பு, கருணை, கோபம், வீரம், அருவருப்பு, ஆச்சரியம், சாந்தம் ஆகிய ஒன்பது வித்தியாசமான பாவனைகளை இயல்பாகவே தனது நடனத்தின் மூலம் அட்டகாசமாக வெளிப்படுத்தி அரங்கத்தில் கூடியிருந்தோர் அனைவரும் எழுந்து நின்று பலத்த கரகோசத்துடன் கூடிய பாராட்டுதல்களைப் பெற்று அரங்கத்தையே அதிர வைத்துவிட்டார் என்பதே உண்மை.

அனைவரையும் பரவசப்படுத்திய நவரச நடனத்தைத் தொடர்ந்து கலைமன்ற இயக்குனரும், கனடாவிலேயே முதன் முதலில் பரதநாட்டிய தேர்வை அறிமுகப்படுத்தி, 20 வருடங்களுக்கு மேலாக நடனப் பயிற்சியை நடத்தி வரும் திருமதி. நிரஞ்சனா சந்துருவின் வாழ்த்துரை இடம் பெற்றது. சிறுமியின் நடனப் பயிற்சியையும், ஆர்வத்தையும், வயதிற்கு மீறிய ஆற்றலையும் கண்டு வியந்ததையும், நடனக் கலைக்கே ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கக் கூடிய தகுதியை பெற்றுவிட்டார் என புகழாரம் சூட்டினார். உலக கலை அரங்கில் அனைத்திலும் இவரது நடனம் இடம் பெற்று, மென்மேலும் புகழும் பெருமையும் சேர்க்க பாராட்டி வாழ்த்திச் சிறப்பித்தார்.

அடுத்து பரத நாட்டிய கச்சேரியில் மிக முக்கிய இடம் பெறும் சிறப்பு நடனமான, ஜதியும் அபிநயமும் அடுக்கடுக்காக வரும் பதவர்ண நடனம் இடம் பெற்றபின் இடைவேளை விடப்பட்டு, ரசிகர்கள் அனைவருக்கும் இனிய விருந்தோம்பல் வழங்கப்பட்டது. அடுத்து மிருதங்ககலாவித்தகர் கனகேந்திரன் குகேந்திரனின் மாணவர்களின் மிருதங்கஇசை இடம்பெற்றது. செல்வன் கீர்த் அவர்களின் தனி மிருதங்க இசைக் கச்சேரி தனது சக மாணவர்கள் நான்கு கலைஞர்கள் ஒரே சீருடையுடன் தமக்கென அமைக்கப்பட்ட மேடையின் நடுவில் அமர்ந்து தங்களது திறனை காட்டி மகிழ்வித்தார்கள். வாதாபி கணபதிம் என்ற விநாயகர் ஸ்துதியை செல்வன் அஸ்வந் ஸ்ரீதரன் புல்லாங்குழலில் இசைக்க, மிருதங்கம் கீர்த் ஜெகலோகேஸ்வரன், கஞ்சிரா ஸரீஸ் சிவன்ரூபன், கடம் கானவினோதன் பாரதியார், மோர்சிங் பிரகாஷ் சோமநாதன் ஆகியோர் தனி ஆவர்த்தனமும், பின்னனி இசையும் நடைபெற்று அனைவரின் பாராட்டுதல்களைப் பெறவைத்தது.

செல்வி.திவ்விகாவின் அரங்கேற்றத்தை பாராட்டி கௌரவிக்கும் வகையில் கனடா நாட்டியப் பள்ளிகளின் சங்கத்தின் அங்கத்தவர் கள் குருவுக்கு நினைவுப் பரிசும், பாராட்டுப் பட்டயமும் அளித்து தங்களது பாராட்டுக்களையும் நல்ஆசியையும் வழங்கி கௌரவித்தார்கள்.

தொடர்ந்து தாள நாத சங்கமமான இசை நடனம் நடை பெற்றதிற்குப் பின், அன்றைய விழாவின் கௌரவ விருந்தினர்களான கலைமாமணி திருவாரூர் பக்தவஸ்தலம், திருமதி. கீதா ராஜசேகர் ஆகியோருக்கு சந்தன மாலை, பொன்னாடை ஆகியவை அணிவித்து, பூங்கொத்து அளித்து கௌரவித்ததிற்குப் பின், அவர்களது உரை இடம் பெற்றது. செல்வி. திவ்விகாவையும், அவரது குருவையும், பெற்றோரையும் பற்றி விரிவாக புகழ்ந்துரைத்ததோடு, மூன்று தலைமுறைகளைக் கண்ட நிகழ்வாக, தனது மாணவர் திரு. கனகேந்திரம் குகேந்திரன் அன்றைய நிகழ்ச்சியில் மிருதங்கம் வாசித்தத்தையும், அவரது மாணவராக செல்வன் கீர்த் மிருதங்கம் வாசித்ததையும் பாராட்டி, செல்வி திவ்விகா, இந்த இளம் வயதிலேயே பரதநாட்டிய கலையில் ஈடுபட்ட கலை ஆர்வத்தையும், கொஞ்சம் கூட களைப்போ, சோர்வோ, தயக்கமோ இன்றி ஒரு மான்குட்டியைப் போன்று துள்ளிக் குதித்து, நவரச பாவனைகளையும் மிகவும் நேர்த்தியாகவும், நளினமாகவும், மூத்த கலைஞர்களின் பின்னனி இசை மற்றும் பாடல்களுக்கு ஏற்ப நடனமாடியது, வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு பெரும் நினைவாகும் என்று குறிப்பிட்டார். பரதக் கலைக்கு பிரதானமான லயம் என்பது அவரது பிறப்பிலேயே உருவாகியுள்ளது. பரதத்திலிருந்து உருவானது நாதமா அல்லது நாதத்திலிருந்து பிறந்தது பரதமா? என்ற வகையில் பக்க வாதத்திய கலைஞர்கள், நட்டுவாங்கம் வழங்கிய செல்வி வனிதா பேரம்பலத்தின் பங்களிப்பு ஆகியவற்றை பாராட்டி, செல்வி திவ்விகா சாட்சாத் மதுரை மீனாட்சியையும், கன்னியாகுமரி தேவியையும் நமது அனைவரின் கண்களுக்கு ஒரு தெய்வீக குழந்தையாக காட்சியளிக்க வைத்துவிட்டார் என்று கூறி, அவரது கலைப்பயணம் ஒரு சகாப்தத்தை உருவாக்கி தொடர்ந்து பெருமையும் புகழும் சேர்க்க நல் ஆசி வழங்கிச் சிறப்பித்தார்கள். இந்த அரங்கேற்றத்தின் மற்றுமோர் சிறப்பு பரத நாட்டியத்திலும் மூன்று தலைமுறை அவ்வரங்கத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. தனது மாணவியை ஒரு ஆசிரியையாக்கிப் பார்க்கவேண்டும் என உருவாக்கிய ஸ்ரீமதி லலிதாஞ்சனா கதிர்காமன், அவர் மாணவி வனிதா பேரம்பலம் அவர் மாணவி திவிக்கா.

அடுத்து, "ஆடாது அசங்காது வா...கண்ணா!" என்ற குழலூதும் கண்ணனின் குறும்புகளைப் பற்றிய மத்தியமாவதி இராகத்தில் அமைந்த பாடலும், அதனைத் தொடர்ந்து கானரீங்கார பதத்துடன் கூடிய தில்லை நாதனிடம் தூது போகக் கேட்பதாய் சிந்துபைரவி இராகத்தில் அமைந்த பாடலுக்கான நடனமும் இடம் பெற்றது. தொடர்ந்து சிறப்பு விருந்தினராக பங்கேற்ற சட்டத்தரணி திரு மனுவேல் ஜேசுதாஸ் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்த பின் அவர்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

கண்டெடுத்த கருவூலம்

தமிழ் நாவல் நூறாண்டு வளர்ச்சி - என்ற நூல் 1977-ல் வெளிவந்தது. தமிழின் முதல் நாவல் என்று கருதப்படும் மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் வெளியான ஆண்டு 1876 என்ற கணிப்பில், தமிழ் நாவல் இலக்கியம் பிறந்து நூறாண்டுகள் ஆகிவிட்டன. அது மிக முக்கியமான நூல். சிட்டியும் சிவபாதசுந்தரமும் இணைந்து எழுதியது.

அது பல முக்கியமான அன்றுவரை தெரிந்திராத பல நீண்ட உரைநடை நூல்களைப் பற்றிய தகவல்களை யும் வெளிக் கொணர்ந்தது. அவற்றில் மிக முக்கியமானது, மிகவும் சுவாரஸ்யமானது, முத்துக் குட்டி ஐயர் என்னும் சிவகங்கை மன்னரின் ஆஸ்தான புலவர் வாய்மொழியாகச் சொன்ன கதை. இது நடந்தது 1775-ம் ஆண்டு ஒரு சிவராத்திரி இரவு.

சிவகங்கை மகாராஜா, இரவி குல முத்து வடுக நாத பெரிய உடையாத்தேவர் (1750-1780) தம் சமஸ்தானப் புலவர் முத்துக் குட்டி ஐயரை அழைத்து, சிவராத்திரி அன்று தாமும் சமஸ்தானாதிபதி களும் இரவு முழுதும் விழித்திருக்க ஒரு கதை சொல்லவேண்டும் என்று பணித்தார். அக்கதை அதற்கு முன் யாரும் சொல்லப்படாததாக இருக்க வேண்டும், தெய்வபக்தி உணர்வும், சிவராத்திரி முக்கியத்து வம் உணர்த்துவதாகவும், 56 தேசங்களும், அவற்றின் இடங்க ளும் தாவரங்களும் விலங்குகளும் இடம்பெறுவதாக அக்கதை இருக்க வேண்டும் என்பதும் சிவகங்கை மன்னரின் நிபந்தனைகள்.

மகாராஜா கதை கேட்க விரும்பியதோ, அதற்கு தம் ஆஸ்தானப் புலவரை பணித்ததோ, நிபந்தனைகளோ நம்மை ஆச்சரியப் படுத்தும் விடயங்கள் அல்ல. எல்லாம் மரபுப்படி தான் நடந்துள்ளன. ஆனால் முத்துக் குட்டி ஐயர் மன்னரின் நிபந்தனைகளையும் நிறை வேற்றினார், அத்தோடு கேட்ட கதையையும் தம் வழியில் தான் சொன்னார். அந்த வழியும், அக்கதையின் சொல்முறையும், கதை பெற்ற வடிவமும் தமிழ் மரபில் முன்னும் இருந்ததில்லை. பின்னும் இருக்கவில்லை. மரபு சார்ந்து புதுமை செய்யும் சமாச்சாரமாகத் தான் அது இருந்தது. இத்தைகைய ஒரு புதுமை நோக்கு சிவகங்கை சமஸ்தானத்தின் இன்று நாட்டரசன் கோட்டை என்று அறியப்படும் அந்நாளைய தென் பளசை என்னும் கிராமத்து முத்துக் குட்டி ஐயருக்கு 1775 அந்த சிவராத்திரி இரவில் எப்படித் தோன்றியது?

விவரமாகச் சொல்ல வேண்டும். சிவகங்கை, ராமனாத புரம் எல்லாம் என்றென்றைக்கும், முத்துக் குட்டி ஐயரின் காலத்திலிருந்து இன்றுவரை கூட வரட்சிக்கும், மழை பொய்ப்பதற்கும், வறுமைக்கும் பெயர் போனது. பஞ்சம் பிழைக்க பின் நூற்றாண்டுகளில் இப்பகுதி மக்கள், இலங்கை, மலேசியா, பிஜி, கயானா, தென் ஆப்பிரிக்கா நாடுகளின் கரும்பு, தேயிலைத் தோட்டங்களில் கூலி வேலை செய்ய கடல் கடந்து சென்றது நமக்குத் தெரியும். முத்துக் குட்டி ஐயரின் காலத்தில் ஏற்பட்ட வரட்சியையும் மக்கள் தவிப்பை யுமே தம் கதைப் பொருளாக்கினார் புலவர். அவ்வரட்சியை நேராகக் கதை சொல்லும் சமாச்சாரமாக்க வில்லை புலவர். அவரது கதையில் தாவரங்கள், மேகங்கள், புல் பூண்டு, விலங்குகள், நட்சத்திரங் கள், கிரகங்கள் மனித உடலின் பாகங்கள் எல்லாமே மனித கதா பாத்திரங்களாகின்றன.

வருட மழை பொழிதல், மேகவண்ண சேர்வைக்காரன் (மேகங்கள்) செலுத்தும் வருசக் கட்டளையாகிறது. மன்னனிடம் சென்று மக்கள் தம் கஸ்டங்களை முறையிடுகிறார்கள். ஒப்பந்தப்படி கட்டளை செலுத்தத் தவறிய மேகவண்ண சேர்வைக்காரனை சிறையிலடைக்க மன்னர் உத்தர விடுகிறார். மேகவண்ண சேர்வைக்காரன் கட்டளை தவறியதற்கு காரணங்கள் தயாராக இருக்கின்றன. அவனது மேல் காரியகர்த்தாக்களான ஆதித்தமய்யன் (சூர்யன்), சோமசுந்தரமய்யன் (சந்திரன்) இருவருக்கும் அவர்களது கஸ்டங்கள்: ஆதித்த மய்யனுக்கு கரியமாணிக்கம் (சனி) என்றொரு புத்திரன் அவன் யாரை வந்து பற்றினாலும் படாதபா டெல்லாம் படுத்தி பின்னர் சந்தோசப்படுத்துவார். சோமசுந்தர னுக்கு அடுத்த வீட்டுக்காரன் மங்களேஸ்வய்யர் (செவ்வாய்) குரூர புத்திக்காரன்... இப்படி போகிறது கதை

இனி சொல்முறையைக் கவனிக்க வேண்டும்: மாதிரிக்கு சில வரிகள்

வெங்கட் சாமிநாதன்

"இப்படியிருக்கிறபடியினாலே ஆதித்தமய்யன் முதல் ஒன்பது வீட்டுக்கார கிரஹஸ்தாளும் ஒன்றொக்கொன்று விகாரத்தால் வக்கரித்துக் கொண்டிருக்கையில் இவர்களை மிஞ்சி நாம் அங்கே போகக்கூடாதென்று மேல மேற்குடி மேகணன் சேர்வைக்காரன் புறம் சற்றே பின்னுக்கு வாங்கியிருக் கிறார்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் விரோதமில்லா மல் அவரவர் எதாஸ்தானங்களில் வந்து சுபிக்சமானதின் பேரில், அனுபவித்துக்கொள்வோமென்று மேகணன் சேர்வைக்காரன் இந்த தவணைக்கு வராமலிருக்கிறானென்று அவ்விடத்துக் காரியம் சீக்கிரத்திலே சமரஸத்துக்கு வரும், அதற்குப் பிறகு வருவானென்று வேதியங்குடியார் சொன்னார்கள்."

கிரகங்கள் சரியில்லாததன் காரணத்தால், இந்த தேசங்கள் நீங்கியபின் பார்த்துக்கொள்ளலா மென்று இருந்த காரணத்தால் இந்த வருடம் மழை பெய்யவில்லை என்று அரண்மணை ஜோஸ்யர்கள் சொன்னார்கள் என்பது பொருள்.

இது பற்றி சிட்டியின் "தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்" புத்தகத்தில் இது கண்டெடுக்கப்பட வரலாறும் செய்திகளும் சொல்லப்பட்டிருக் கின்றன.

வசன சம்பிரதாயக் கதை என்ற பெயரில் இப்போது அறியப்படும் இக்கதை 1775 ஆண்டு சிவராத்திரி இரவு வாய்மொழியாக முத்துக்குட்டி அய்யரால் மன்னர் பின் அவதானிகள் முன்னிலையில் சொல்லப்பட்டது. இதற்கு முன் வசன வடிவில் எழுதப்பட்டது, 1740-ம் ஆண்டு வீரமா முனிவரின் "அவிவேக பரமார்த்த குருவும் சீடர்களும்" ஆனால் அது அச்சில் வெளியிடப்பட்டது 80 வருடங்கள் கழித்து 1820-ல்..

முத்துக் குட்டி ஐயரின் காலத்தில் வீரமா முனிவரின் நூல் ஐயருக்குக் கிடைத்திருக்குமே என்பது தெரியாது. ஆனாலும், வீரமா முனிவரின் நேரிய எளிய கதை சொல்லும் முறையும், முத்துக் குட்டி அய்யரின் உருவக வடிவிலான கதை சொல்லலும் முற்றிலும் ஒன்றுக்கொன்று வேறு பட்டவை. மேலும், வீரமா முனிவரின் இத்தாலிய ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவம் அவர் காலத்திய குருகுல கல்வி முறையைக் கேலி செய்ய அவிவேக பரமார்த்த குரு கதையை சிருஸ்டித்தது. முத்துக்குட்டி ஐயர் சம்பிரதாயத்தில் மூழ்கியிருப்பவர். உலகப் பார்வை மட்டுமல்ல, அவரவர் கையாண்ட தமிழ் வசனமும் வேறுபட்டது. எது என்னவாக இருந்தாலும், முத்துக் குட்டி ஐயருக்கு மட்டுமல்ல, வெகு காலத்திற்கு பரமார்த்த குரு கதை தமிழருக்கு தெரியாமலேயே இருந்தது என்று தான் சொல்லவேண்டும். பிறகு ஒரு வசன கதை உருவாக்கம் கிடைக்க 1879-ல் வேதனாயகம் பிள்ளை பிரதாப முதலியார் சரித்திரம் வெளிவரும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அதுவும் நகைச் சுவையில் தோய்த்து எடுக்கப்பட்ட கதை தான். ரொம்ப காலத்திற்கு தமிழனைச் சிரிக்க வைத்தால் தான் அவன் கதை கேட்க சம்மதிப்பான் போலத் தோன்றுகிறது. முத்துக் குட்டி ஐயர் தான் கதை பண்ணும்போது இந்த மசாலாவைச் சேர்க்க மறக்கவில்லை.

(தொடரும்)

JUSTIN WILLIAM* 416-803-7344

SASI CHELVARATNAM* 416-725-1125

BALAN KANESAPILLAI* 416-844-5401

JAYANTHYI SRITHARAN* 416-918-5872

VASANTHY NIRANJAN* 416-845-8272

RAVI PARAMU* 416-262-4176

RAVI RAVEENDRAN* 416-817-8479

RAJ .A . RASARATNAM* 416-726-8055

SHIVA MANIAM* 416-727-5052

MORRISON SAVERMUTTHU* 416-220-3050

SEELAN SIVA AIYADURAI* 416-451-0271

KETHEES SEEVARATNAM* 416-275-5788

SHAN THAYAPARAN* 416-567-7675

KUMAR SINNATHAMBY* 416-576-4357

THANA SUSEENDRA* 416-893-4376

PARAM. G GNANASWARAN** 416-230-1107

SHIVA SHARMAH* 416-666-5515

எம்மிடம் வீடு வாங்கும், விற்கும், அல்லது முதலீடு செய்வதன் மூலம் பின்வரும் பரிசுகளை வெல்லுங்கள்*

Call the real REAL TEAM



7 Consolation Prizes
3 Digital cameras, 3 BBQ Machines, 1 Bicycle

சீட்டிழுப்பு ஜனவரி 2007 இல் நடைபெறும்

Now Serving in two locations

HOMELIFE/GTA Realty Inc. Brokerage

1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3 (HWY 401 & McCowan Rd.) 416.321.6969

145 Traders Blvd. E., #28 Mississauga, ON L4Z 3L3 (HWY 401 & HWY 10) 905.712.2666

*Sales Representative **Broker

* Some conditions may apply, Vehicle may not be as illustrated

கூத்தர் பெற்ற மதிப்பு

கோயிலும் கூத்தும் (4)

கோவலன் கூத்து எமது ஊரிற் பிரபலியானதொன்று. பல கோயில்களில் அது ஆடப்பட்டிருக்கின்றது. நுணாவிற் குளத்துக் கண்ணகை அம்மன் ஆலயத்தின் முன்னுள்ள வயல் வெளியில் அறுவடையின்பின் ஆடப்பட்ட கோவலன் கூத்தை நான் பார்த்திருக்கின்றேன். இதில் எனக்கு உறவினரான திரு. கந்தையா அண்ணர் முற்கோவலனாக நடித்திருக்கின்றார். பட்டாளத்திலிருந்து ஓய்வு பெற்றவராதலால் இவரை 'மிலிட்டரி' கந்தையா என்றே எல்லோரும் அழைப்பர்.

அக்காலத்தில் சில கூத்துகளில் ஒரு பாத்திரத்தை இருவர் ஏற்று நடிப்பதுண்டு. கோவலன் கூத்தின் முற்பகுதியில் கோவலன் பாத்திரத்தைத் தாங்குபவர் முற்கோவலன் என்றும் பிற்பகுதியில் கோவலனாக நடிப்பவரைப் பிற்கோவலன் என்றும் அழைப்பதுண்டு.

எனது மூத்த அண்ணர் திரு. வி. பசுபதி அவர்களும் ஒரு கூத்து நடிகர். அவரும் கந்தையா அண்ணருடன் கோவலன் கூத்தில் சிறு பாத்திரங்களில் நடிப்பது வழக்கம். இந்தக் குழு அயல் ஊர்களிலும் கோவலன் கதையை மேடையேற்றியிருக்கின்றது.

நுணாவில் மேற்கில் ஆனைக்கோட்டை என்று ஒரு குறிச்சி இருக்கிறது. அங்குள்ள நாச்சிமார் கோயில் முன்றலில் காத்தவராயன் கூத்தும் பார்த்திருக்கிறேன். தொட்டியத்துச் சின்னர், ஆறுமுகம் போன்றோர் இதில் நடித்திருக்கிறார்கள்.

பபூன் செல்லையா என்ற நடிகர் நாடகத்தின் இடையிடையே தோன்றி நகைச்சுவைக் கதைகள் சொல்லிப் பாடி ஆடுவார். அவர் சொன்ன பகடிக் கதை ஒன்று இது:

ஒரு பூசகர் குளத்தில் தண்ணீர் எடுத்துக் கோயிற் பூசைக்கு அமுது ஆக்குவது வழக்கம். பூசையெல்லாம் முடிந்த பின்னர் அந்த அமுதைத்தான் அவரும் மனைவியும் சாப்பிடுவார்கள். அப்படி ஒருமுறை சாப்பிடும் பொழுது குளத்து மீன்குஞ்சு ஒன்றையும் உட்கொண்டு விட்டார். அதையிட்டு அவர் கவலைப்பட வில்லை. மாறாக, அவர் மனைவியைப் பார்த்து, 'குஞ்சுமீன் இவ்வளவு சுவையாக இருந்தால் இதனைப் பெற்ற தாய் தகப்பன் எவ்வளவு சுவையா இருக்க வேண்டும்?' என்று சொல்லி வாயூறினார். இந்த இடத்திற் கதையை நிறுத்திவிட்டுச் செல்லையா அண்ணர் பூசகர் பாடியதாக ஒரு பாட்டுப் பாடுவார்.

குஞ்சுமீன் குணா குணா
மாதா பிதா மகா குணா

என்று மெல்லிய ஆட்டத்துடன் அவர் பாடப் பார்வையாளர்களின் சிரிப்பொலி சூழ்ந்துள்ள நொச்சிப் பற்றைகளையும் அசைக்கும்.

சிறந்த பொழுதுபோக்கு

அந்தக் காலத்தில் (1930களில்) கூத்துக்கள்தாம் மக்களின் முதன்மையான பொழுது போக்காக இருந்தன. எனது ஊரில் மட்டுமல்லாது ஈழத்தின் பிற பகுதிகளிலும் கூத்தாடுவதிலும் அதனைக் கூடியிருந்து பார்ப்பதிலும் மக்கள் மகிழ்வெய்தினர். கூத்தரும் நன்கு மதிக்கப்பட்டனர்.

முற்காலத்தில் கூத்தாடுவது தொழிலாக இருந்தது. கூத்தர்கள் மன்னரிடமிருந்தும் செல்வந்தரிடமிருந் தும் 'பெருவளம்' பெற்று வாழ்ந்தனர் என்பதனை,

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்

என்ற புறத்திணையில் வரும் 30ஆவது பாடல் எடுத்துரைக்கின்றது.

கூத்தர் - கூத்து ஆடுவதில் வல்லவர்
பாணர் - பண்ணிசையில் வல்லவர்
பொருநர் - பிறரைப் புகழ்ந்து பாடுவதில் வல்லவர்
விறலியர் - இசை, நடனம் முதலிய கலைகளில் வல்ல பெண்கள்
(விறல் - திறமை)

பிற்காலத்திற் கலைஞர்களை ஆதரிப்பவர் குன்றியதால் கூத்து, இசை, நடனம் போன்றவற்றைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் வறுமைக்குள்ளாகி வருவாய் தரும் வேறு தொழில்களைப் பார்க்கலாயினர். அதனால் தமிழர் கலைகள் தாழ்வுறலாயின. வருவாய் இல்லாத எந்தத் தொழிலுக்கும் எந்தச் சமுதாயத்திலும் மதிப்பிருப்பதில்லை. அத்தகைய தொழிலைப் பார்ப்பவர்களும் மதிக்கப்படுவ தில்லை. கூத்தாடுவது ஆத்தாதவன் செய்யும் தொழில் என்று அவர்கள் இகழப்பட்டனர்.

தெய்வத்துக்குக் காணிக்கை

நான் பார்த்த கூத்துக்களை ஆடியவர் அவற்றைத் தொழிலாகக் கொண்டிருக்கவில்லை. கூத்துக்கள் பொதுமக்களுக்குத் தலையாய பொழுதுபோக்காக இருந்தாலும் அவற்றை ஆடியவர்களும் பொழுதுபோக்கத்தான் ஆடினார்கள் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது.

கூத்துக்கள் தெய்வத்துக்குக் காணிக்கையாகவே மேடையேற்றப்பட்டன. தெய்வத்துக்குத் தொண்டு செய்வதே முதன்மையான கடமை என்று கருதப்பட்டது. கூத்தை ஆடவேண்டும் என்று கேட்பதுவும் தெய்வந்தான். அதனால் தெய்வத்தின் விருப்பத்தை நிறைவேற்றவே கூத்து மேடையேற்றப்பட்டது.

கூத்துப் பழகத் தொடங்குவதற்குமுன் பூசை வழிபாடுகள் நடத்தப்படுவதும் உண்டு. கூத்தின் இடையில் தெய்வம் மேடையில் ஏறி நடிகர்களைப் பாராட்டுவதையும் நான் பார்த்திருக்கிறேன்.

கூத்து முடிவில் நடிகர்கள் போட்ட உடுப்புகளோடு கோயில் வாயிலில் வரிசையாக நிற்பர். தெய்வம் ஆடிவந்து அவர்களுக்குத் திருநீறு, எலுமிச்சம் பழம் என்பவற்றைக் கொடுத்து அவர்களுக்கு அருள்பாலிக்கும்.

கூத்தர் பெற்ற மதிப்பு

தெய்வ அருளைப் பெற்றுக் கொண்டு நடிகர் பறை மேளம் முழங்க ஊர்வலமாகச் செல்வர். அவர்களுக்குப் பின்னால் ஒரு பெரிய கூட்டம் திரண்டு செல்லும். இடையிடையே நிறைகுடம் வைத்து, ஆரத்தி எடுத்து அவர்களை மக்கள் வரவேற்பர். மாலைகள் அல்லது சால்வைகள் அணிதல், நகைநட்டுகள் அல்லது பொருள் பண்டங்கள் கொடுத்தல் போன்ற சிறப்புகளுஞ் செய்யப்படும். செல்வந்தர் பணமுடிப்புகளும் வழங்குவர்.

நான் ஆசிரியராக மாத்தளையிற் பணியாற்றிய காலத்தில் மாமனார் காலமாகி விட்டார். இறுதிக் கிரியைகள், எட்டு, முப்பத்தொன்று என்று எல்லா வைபவங்களிலும் ஏகப்பட்ட கூட்டம். அவர் அவ்வளவுக்குப் பிரபலியமாக இருந்தார்.

ஆண்டுத்திவச நாளன்று மாமியுடன் பேசிக்கொண்டிருக்கையில் திருமணத்துக்கு முன்னதாக மாமா நடித்த கூத்துக்களைத் தான் பார்த்ததாகச் சொன்னா. 'அப்போ காதற் கலியாணமோ மாமி?' என்று பகடியாகக் கேட்டுவிட்டேன். அவவின் கண்கள் சொரியத் தொடங்கின. நான் பேச்சை நிறுத்திக் கொண்டேன். அவ இன்னமும் மாமாவின் நினைவுகளுடனேயே வாழ்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

மாமியின் பெயர் சின்னம்மா. சரியான சிவப்பு நிறம். இந்த வயதிலும் நல்ல அழகு. இளம் வயதில் இன்னும் கவர்ச்சியாக இருந்திருக்க வேண்டும். மேலும் குடும்பத்துக்கு ஒரே பெண். சொத்துப் பத்துகளும் எக்கச்சக்கம். பலபேர் அவரைத் திருமணஞ் செய்யப் போட்டி போட்டிருத்தலுங்கூடும்.

இருப்பினும் ஒரு தொழிலும் இல்லாத (குடிகார) மாமாவுக்கு அழகான ஒரு பெண்ணைப் பெருஞ் சீதனத்துடன் கொடுத்திருக்கிறார்கள் என்றால், அதற்குச் சிறப்பான வேறொரு காரணம் இருந்திருக்க வேண்டும். எனது சிந்தனைக்கு எட்டிய வகையில், அது அவர் தனது நடிப்புத் திறமையால் தேடிக்கொண்ட புகழன்றி வேறு ஒன்றுமில்லை. கூத்தாடுகின்ற வருக்குப் பெண்களை விரும்பிக் கொடுக்கப் பெற்றோர் தயாராக இருந்த காலம் அது.

கவிஞர் வி. கந்தவனம்

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா
13ஆவது வெளிக்கள விருந்து - 2006

எமது சங்கத்தால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் வெளிக்கள விருந்து இவ்வாண்டும் நடைபெற உள்ளது.

இடம் - Kids Town Park - Birchmount & Mcnicoll
காலம்- ஓகஸ்ட் 05, 2006 - சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6:00மணிவரை நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகள் யாவும் சிறுவர் முதல் முதியோர்வரை பங்குபற்றும் வண்ணம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதால் எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பாடசாலையின் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

பொய்கை

www.poikai.com இணையதளத்தில் புதியதோர் சஞ்சிகை. (கலை, இலக்கிய, ஆன்மீக, மருத்துவ காலாண்டு இதழ்). இவ்விணையத்தள சஞ்சிகை "பொய்கை" எனும் பெயரில் வாசக நெஞ்சங்களில் புதுமணம் பரப்ப இலக்கியப் பூக்களை அள்ளிவருகிறது. இந்த இதழ் தொடக்கம் ஒவ்வொரு காலாண்டுக்கும் இப்பொய்கை இதழ் இணையத்தளத்தில் வெளிவரவிருக்கிறது. வாசகர்களுக்கு நிறைவைத்தரும் புதிய ஆக்கங்களை பொய்கை வரவேற்கிறது.

ஞானம்ஸ் ஸ்ரூடியோ

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12
Professional Photographer - கதிர்- 416-750-8118
2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough

ஸ்ரீ சத்ய சாயிபாபா மார்க்கம் அன் கிங்ஸ்ரன் பாபா சமித்தியினர் மார்க்கம் அன் கிங்ஸ்ரன் சந்திப்பில் அமைந்துள்ள ஸ்காபரோ கொமியூனிற்றி சென்ரர் மண்டபத்தில் புதிதாக சிறுவர்களுக்கான ஆன்மீக வகுப்புக்களை (பாலவிகாஸ்) ஆரம்பித்துள்ளார்கள். கடந்த இரண்டாம் திகதி யூலை 02, 2006 ஆண்டு ஞாயிற்றுக்கிழமை இவ்வகுப்புக்கள் ரொறொன்ரோ பிராந்தியம் இரண்டு தொடர்பதிகாரி திரு. துரைராசா அவர்களினால் முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வகுப்புக்கள் ஒவ்வொரு ஞாயிறு காலை 11.00 மணிமுதல் மதியம் 12.30 மணி வரையும் இடம் பெறும். வகுப்புக்களை ஆசிரியை திருமதி சபா நடேசன் அவர்கள் நடத்துவார்கள்.

தொடர்புகளுக்கு: திரு. கோபால் (தலைவர்) 416.265.9477, 416.269.1612, 416.439.0505

வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.

பரமி - **416.230.1107**

HOME LIFE HIGHER STANDARDS

PARAM GNANASWARAN
Broker
HOME LIFE GTA REALTY INC. Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666
paramg@gmail.com
* INDEPENDENTLY OWNED AND OPERATED

தலையால் முட்டிய ஜிடேனுக்கு தங்கப்பந்து!

உலககிண்ணம் 2006

விளையாட்டுத் தகவல்கள் 194

ஒரு வீரர் அடிக்கும் பெனால்டி உதை, ஒரு அணியின் தலை எழுத்தையே தீர்மானிக்க கூடியது அல்லது உலக கிண்ணத்தை யாருக்கு என்று முடிவு செய்யவோ கூடியது. இதனால் தான் 1998 இல் தலையால் முட்டி கோல்போட்டு பிரேசிலுக்கு எதிராக பிரான்ஸ்சுக்கு வெற்றியை பெற்றுகொடுத்தார். ஆனால் இம்முறை அவர் தலையால் முட்டியது தன்தலையிலேயே தானே மண்ணைவாரிப் போட்டுக் கொண்டது போல் ஆகிவிட்டது. அருமையான வழியனுப்பு விழாவுடன் நாடு திரும்பியிருக்க வேண்டிய ஜிடேன் இப்போது அவரும் பிரான்ஸ் அணியும் தலைகுனிந்து நிற்கின்றது. உலகில் ரசிகர்களின் நெஞ்சங்களை கவர்ந்தவரும், உதை பந்தாட்டத்தில் போற்றத்தக்க வீரரான ஜிடேன், இந்த சம்பவம் நடக்காமல் இருந்திருந்தால் பிலே, மரடோனா, பெக்கன் பவர் வரிசையில் வரலாற்றில் இடம் பெற்றிருப்பார் ஆனால்.....!!!

ஜேர்மனியில் முடிவுற்ற உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் தங்கப்பந்து விருதை பிரான்ஸின் நட்சத்திர வீரர் ஜினொடின் ஜிடேன் பெற்றார்.

போட்டியில் சிறப்பாக விளையாடியதாக உலக கால்பந்து சம்மேளனத்தால் FIFA தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது இந்த Golden Ball விருது.

முதல் சுற்று ஆட்டங்களில் அவ்வளவாக பிரகாசிக்கப்பட்டாலும், பிரேசிலுக்கு எதிரான ஆட்டத்தில் தனது மாயாஜாலத்தை காட்டினார் ஜிடேன். அதன் பின்னர் போர்த்துக்கல்லுடனான ஆட்டத்திலும், இறுதி ஆட்டத்திலும் தலா ஒரு கோல் அடித்தார்.

கன்னவரோவுக்கு வெள்ளிப்பந்து விருது: போட்டி முழுவதும் அணி வீரர்களுக்கு உற்சாகம் அளிப்பவராக விளங்கியவரும், மிகக் குறைந்த அளவுக்கு 'தவறுகள்' இளைத்தவருமான இத்தாலிய அணித்தலைவர் ஃபேபியோ கன்னவரோ வெள்ளிப் பந்து விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார்.

பிர்லோவுக்கு வெண்கலப் பந்து: இறுதி ஆட்டத்தில் பட்வெய்ஸர் ஆட்டநாயகனாகத் தேர்வு பெற்ற இத்தாலியின் ஆன்ட்ரியா பிர்லோ வெண்கலப்பந்து விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார்.

க்ளோசுக்கு தங்க சப்பாத்து: இப்போட்டியில் ஏழு ஆட்டங்களில் ஐந்து கோல்கள் அடித்த ஜேர்மனி வீரர் மிராஸ்லாவ் க்ளோசுக்கு Golden Shose விருது வழங்கப்பட்டது.

கோஸ்டாரிகாவுக்கு எதிராகவும், ஈகுவடாருக்கு எதிராகவும் தலா இரண்டு கோல்களும், ஆர்ஜென்டீனாவுக்கு எதிராக ஒரு கோலும் அடித்தார் க்ளோஸ்.

ஆர்ஜென்டீனாவின் ஹெர்னன் கிரெஸ்போ, பிரேசிலின் ரொன்ல்டோ ஆகியோர் தலா மூன்று கோல்கள் அடித்திருந்தாலும், களத்தில் 305 நிமிடங்கள் இருந்த கிரெஸ்போவுக்கு வெள்ளி சூ (shoe) விருதும், 409 நிமிடங்கள் இருந்த ரொனால்டோவுக்கு வெண்கல சூ (shoe) சப்பா விருதும் அளிக்கப்பட்டன. 1962 இல் சிலியில் ஆறு பேர் தலா நாலு கோல் அடித்து தங்க சூ வென்றனர். அதற்குப் பின், தங்க சூ வென்றவர்கள் குறைந்த பட்சம் ஆறு கோல்கள் அடித்துள்ளனர்.

எஸ். கணேஷ்

பஃபனுக்கு லெவ் யாஷின் விருது: உலகக் கோப்பையின் சிறந்த கோல் கீப்பருக்கு அளிக்கப்படும் லெவ் யாஷின் விருதுக்கு இத்தாலியின் ஜியான்லுகி பஃபன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இப்போட்டியில் இறுதி ஆட்டத்துக்கு முன் ஆறு ஆட்டங்களில் ஒரே ஒரு கோல் மட்டுமே இத்தாலிக்கு எதிராகப் போடப்பட்டது என்பது பஃபனின் பெருமைக்கு சான்று. அந்த கோலும் அமெரிக்காவுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் இத்தாலி வீரரே அடித்த 'சேம் சைடு' கோல் என்பது குறிப்பிடத்தக்கது.

1994 இல் பெல்ஜியத்தின் மைக்கேல் பிருட் ஹோம், 1998 இல் பிரான்ஸின் ஃபேபியன் பார்தெஸ், 2002இல் ஜேர்மனியின் ஒலிவர் கான் ஆகியோர் இந்த விருதை வென்றுள்ளனர்.

ஜேர்மனியில் நடந்து முடிந்த உலக கோப்பைப் போட்டியில் அரங்குக்குள்ளும் வெளியேயும் கண்ணியமாக நடந்துகொண்டு, அடக்கமாக ஆடிய அணிகளாக பிரேசிலும் ஸ்பெயினும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இரு அணிகளுக்கும் கோப்பையும், ஒவ்வொரு வீரருக்கும் பதக்கங்களும் (அணி பயிற்சியாளர்களுக்கும் சேர்த்துதான்) சான்றிதழும் வழங்கப்படுகிறது. அணிக்கு மொத்தமாக 23 இலட்ச ரூபாய் மதிப்புள்ள விளையாட்டு சாதனங்களும் வழங்கப்படுகிறது. இது இளைஞர்களிடையே விளையாட்டை ஊக்குவிக்க பயன்படும்.

கண்ணியமான அணி என்பதை ஆறு அம்சங்களைக் கொண்டு தேர்வு செய்கின்றனர். ஒவ்வொரு அணியும் எத்தனை மஞ்சள் அல்லது சிவப்பு அட்டை பெறுகிறது என்பதும் அதில் கணக்கிடப்படும்.

ஆக்க பூர்வமான ஆட்டம், எதிர் அணி வீரர்களுக்குத் தரும் மரியாதை, ஆட்ட நடுவர்கள் போன்ற அதிகாரிகளுக்குத் தரும் மரியாதை, பயிற்சி தருவோரின் நடத்தை, ஆதரவாளர்களின் நடத்தை ஆகியவையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

பிரேசில் அணி இப்படி விருது பெறுவது இது மூன்றாவது முறை. ஸ்பெயின் அணி இப்போதுதான் முதல்முறையாக இந்த விருதைப் பெறுகிறது. இந்த அணி வீரர்கள் கோபக்காரர்கள். இதற்காகவே இவர்களை "சிவப்பு ரோஜாக்கள்" என்றே அழைப்பார்கள்.

இந்தமுறை கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு முழுக்க முழுக்க ஆட்டத்தில் கவனம் செலுத்தி சக்தியெல்லாம் அதில் செலவிட்டனர். எனவே தரமும் உயர்ந்து விருதும் கிடைத்தது.

இத்தாலி Champion

உலகக் கோப்பை கால்பந்து சாம்பியன் பட்டத்தை இத்தாலி நாலாவது முறையாக கைப்பற்றியது.

பெர்லினில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் பிரான்ஸை 6 - 4 என்ற கோல் கணக்கில் டை பிரேக்கரில் வென்றது இத்தாலி.

ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன. கூடுதல் நேரத்தில் கோல் போடமுடியவில்லை.

மந்தமான தொடக்கம்: மந்தமாக தொடங்கிய ஆட்டம் ஆறாவது நிமிடத்தில் சூடுபிடித்தது. சக வீரர் தள்ளிக் கொடுத்த பந்தை பாக்ஸின் அருகே பெற்று, கோலை நோக்கி வேகமாகக் கடத்திச் சென்றார். பிரான்ஸின் பிளாரன்ட் மலோவுடா. அதை, இத்தாலி வீரர் மெட்டராஸி ஃபவுல் செய்ததாகக் கூறி எதிரணிக்கு 'பெனால்டி கிக்' கொடுத்தார். ஆஜென்டீனா நடுவர் எலிசான்டோ. அதை பிரான்ஸ் அணித்தலைவர் ஜிடேன் கோலாக்கி அணியை முன்னிலைப்படுத்தினார்.

அந்த கோலிலும் பிரான்சுக்கு அதிஷ்ரம் இருந்தது. வலது கோல்பகுதியில் ஜிடேன் அடித்த பந்து, கோல் கம்பத்தில் பட்டு கோல் எல்லையைத் தொட்டு மீண்டும் கம்பத்தில் அடித்து வெளியே சென்றது. இல்லையேல் பிரான்ஸ் அணியினர் கடும் ஏமாற்றம் அடைந்திருப்பர். ஆனால் நடுவர் அது கோல் என சரியாகத் தீர்ப்பளித்தார்.

அதன்பின்னர் சுறுசுறுப்புடன் விளையாடி, 19வது நிமிடத்தில் சமன் செய்தது இத்தாலி. வலது கார்னரில் இருந்து வந்த பந்தை மெட்டராஸி தலையால் முட்டி கோலுக்குள் திணித்து அணியை 1 - 1 என சமன் அடையச் செய்தார்.

அதன்பிறகு முதல் பாதியில் மட்டுமல்லாது, ஆட்ட முழுநேரத்திலும் இரு அணிகளும் கோல்போட மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. கூடுதலாக விளையாடப்பட்ட 30 நிமிடத்திலும் கோல் போடமுடியாததால் டைபிரேக்கர் முறை கடைப்பிடிக்கப்பட்டது. அதில், இத்தாலி வெற்றி பெற்றது.

ஜிடேன் வெளியேற்றம்: கூடுதல் நேரத்தின் 19வது நிமிடத்தில் பிரான்ஸ் அணித்தலைவர் ஜிடேன் சிவப்பு அட்டைக்குள்ளாகி வெளியேறினார். இத்தாலியின் மெட்டராஸியை தனது தலையால் மார்பில் முட்டியதற்காக 'ரெட் கார்டு' தண்டனையைப் பெற்றார் ஜிடேன். அதன் பிறகு 10 வீரர்களுடன் பிரான்ஸ் விளையாட வேண்டியதாயிற்று.

இத்தாலியின் ஆண்ட்ரியா பிர்லோ, மார்கோ மெட்டராஸி, டேனியல் டி ரோசி, அலெசாண்ட்ரோ டெல் பிரோ ஆகியோர் கோல் பெனால்டி சூ அவுட்டில் கோல் போட்டனர்.

பிரான்ஸ் சார்பில் சில்வைன் வில்டார்ட், எரிக் அபிடாஸ், வில்லி சக்னால் கோல் அடித்தனர். டேவிட் டிரெஸ்கெட் வாய்ப்பை வீணடித்தார். அதனால் பிரான்ஸ் தோற்றது.

இறுதிச் சுற்றில் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட்ட பிரெஞ்சு வீரர் ஜினடின் ஜிடேன், சக வீரர்களிடம் தனது தவறான செயலுக்காக வருந்தி மன்னிப்பு கோரினார்.

இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டிருந்த வேளையில், ஏதோ ஒரு வேகத்தில் இத்தாலி அணி வீரர் மெட்டராஸியின் மார்பில் தலைவைத்து முட்டி மோதித் தள்ளினார் ஜிடேன். இதனால் சிவப்பு அட்டையைக் காட்டி அவரை வெளியேற்றினார். அடுத்ததாக பெனால்டி ஷாட் அடிக்க வேண்டிய நேரத்தில் அவர் இல்லாததால் அணியின் வெற்றி வாய்ப்பே பாதிக்கப்பட்டது.

அவர் களத்தைவிட்டு வெளியேறியதால் சக வீரர்களிடம் உற்சாகம் குறைந்தது. மனோரீதியான அந்த பாதிப்பிலேயே அவர்கள் கோல் வாய்ப்புக்களைத் தவறவிட்டனர். பிறகு அணி வீரர்களுக்கான உடை மாற்றும் அறைக்கு வந்த ஜிடேன், சக வீரர்களைப் பார்த்து, 'கோபத்தில் உணர்ச்சி வசப்பட்டு தவறு செய்துவிட்டேன், அணி வாய்ப்பையும் உங்களுடைய வெற்றி வாய்ப்பையும் கெடுத்துவிட்டேன். மன்னித்துவிடுங்கள்' என்று வருத்தம் மேலிடக் கூறினார். இதை அவருடைய சக வீரர் ஜீன் ஆலன் பௌம் சாங் தெரிவிக்கிறார்.

ஜேர்மனி மூன்றாம் இடம்

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் மூன்றாம் இடத்தைப் பிடித்து ஆறுதல் தேடிக்கொண்டுள்ளது போட்டியை நடத்திய ஜேர்மனி. அரையிறுதி ஆட்டங்களில் தோல்வியுற்ற ஜேர்மனி போர்த்துக்கல் அணிகள் மூன்றாம் இடத்துக்காக சுட்கார்ட் நகரில் விளையாடின. அதில் ஜேர்மனி 3 - 1 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல்லை தோற்கடித்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

வட்டிவீத ஏற்றம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது

கனடிய மத்தியவங்கியின் ஆளுனர் திரு. டேவிட் டொட்ஜ், யூலை 11, 2006 திகதி கூடிய கூட்டத்தில் கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதத்தின் அதிகரிப்பை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர். கடந்த ஏழு தடவைகள் 1/4 வீதம் என்ற அளவில் சீராக அதிகரித்து வந்தவர், இம்முறை வட்டிவீத அதிகரிப்பை நிறுத்தியது, பல பொருளாதார நிபுணர்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது. இதற்கு இவர் கூறிய காரணம், கனடிய பொருளாதாரம் ஒருவீத மந்த வளர்ச்சி ஏற்படலாம் என்பதே. இதனைப் பல பொருளாதார எதிர்வுகூறுபவர்கள் ஒத்துக் கொள்ள வில்லை. கடந்த ஏழு தடவைகளின் அதிகரிப்பின் பின் இப்பொழுது, கனடிய மத்தியவங்கியின் வட்டிவீதம் 4.25% ஆகவும் முதன்மை வட்டிவீதம் 6.0% (Prime Rate) ஆகவும் காணப்படுகின்றது.

CMHC இன் காப்புறுதியிலான மாற்றங்கள்

வீடுவாங்கும் போது 25% இற்கு குறைவாக முதலீடு (Down Payment) செய்யும் போது காப்புறுதி எடுக்கவேண்டும் என்பது தெரிந்த விடயம் மேலும் முதலீடும் தொகைக்கு ஏற்ப இந்த காப்புறுதியின் அளவும் மாறும் என்பதும் விளம்பர வாசகர்கள் அறிந்தது.

இதுவரை இருந்து வந்த காப்புறுதி அமைப்பில் சில மாற்றங்கள் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக மூன்று மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அவற்றைப்பற்றிய தகவல்களைக் கீழே பார்க்கும்போது முக்கியமான மூன்று மாற்றங்கள் அவை. 1. Application fee 2. Interest only 3. Extended Amortization

Application Fee

யூன் 28, 2006 திகதியிலிருந்து அடமானக்கடன் எடுப்பதற்கான விண்ணப்பகட்டணம் (Application Fee) (பொதுவாக $165 ஆகக்கூடியது $235) நீக்கப்படுகின்றது.

Interest only

CMHC இன் மற்றைய அறிவிப்பு. வீடுவாங்குபவர்கள் Credit History சிறந்தமுறையில் போற்றப்பட்டு வந்திருந்தால் அவர்களிற்கு முதல் 10 வருடங்களிற்குரிய மோட்கேஜில் வட்டிமட்டும் கொடுப்பனவு செய்யக்கூடியதாக இருக்கும். அடமானம் எடுக்கும்போது இதுவரையில் வட்டியும் ஒரு பகுதி முதலையும் (Principal) கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது.

ஆனால் புதிய அறிவிப்பின் பிரகாரம் வட்டிமட்டும் கொடுப்பனவு செய்ய முடியும் இதனால் மாதாந்த கட்டணம் குறைந்து காணப்படும் இந்த அறிவிப்பு வாங்கப்படும் வீடுகளிற்கும் (அடுக்கு மாடிக்கட்டடங்கள் உட்பட) ஏற்கனவே இருக்கும் அடமானத்தை நீக்கி, புதிதாக எடுக்கப்படும் அடமானத்திற் கும் (அதாவது Refinace) பொருந்தும்.

Extende Amortization Period

கடந்த ஆண்டுவரை கனடாவில் எடுக்கப்படும் அடமானத்தினை திருப்பி கொடுக்கும் மொத்த காலம் 25 வருடங்களாகவே காணப்படும். இந்த வருடத்தின் (2006) ஆரம்பத்தில் இந்த Amortization காலம் 30வருடமாக ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு காலத்தை அதிகரிப்பதால் மாதாந்த கட்டுப்பணம் குறையும் என்பது அறிந்ததே. புதிய அறிவிப்பின் பிரகாரம் மோட்கேஜின் திருப்பி கொடுக்கும் காலம் 35வருடங்கள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாதாந்த கட்டுப்பணம் குறிப்பிட்டளவு குறையும் என்பது அறியக்கூடியது.

மறுதலையாக மொத்தமாக கொடுப்பனவு செய்யப்படும் வட்டியின் அளவும் மிக அதிகரிக்கும் என்பதும் ஞாபகத்தில் கொள்வது சிறந்தது. கடந்த 60 வருடத்திற்கு மேலாக இயங்கவரும் இந்த Canada Mortgage and Housing Corporation இவ்வாறு வேறுவிதமான பல மாற்றங்களை அண்மையில் கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மேலும் 30, 35 வருடங்களிற்கான அடமானக்கடன் பெறும்போது காப்புறுதியின் Premium 0.20% மற்றும் 0.40% இனால் அதிகரிக்கப்படும் என்றும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

Property Tax Assessments Frozen

முன்பு இருந்த

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர்-232

பழமைவாதக் கட்சியினால் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட Current Value Assesment என்ற முறை, அதாவது ஒவ்வொரு வருடத்திற்குரிய வீட்டி வரி விலை (property tax) அந்த வருடத்திற்குரிய Property இன் பெறுமதியைக் கொண்டு கணக்கிடுவதே ஆகும். கடந்த பல வருடங்களாக இந்த முறை பாவிக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் இப்பொழுது ஆட்சியில் இருக்கும் லிபரல் கட்சி எதிர்வரப்போகும் இரண்டு வருடங்களிற்கு (2007 மற்றும் 2008) இந்த Property Value ஐ கணக்கிடுவதை நிறுத்திவைத்துள்ளது.

இந்த கணக்கீட்டை செய்துவரும் MPAC என அழைக்கப்படும் Municipal Property Assessment Corp இன் முறையில் பல மாற்றங்களை செய்வதற்காகவே தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது.

வர்த்தகம் ஒன்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவரின் இழப்புகளுக்கு ஒரு காப்புறுதி

(Key Person Insurance)

சில வருடங்களுக்கு முன்பு கனடாவில் வெளிவரும் ஒரு பிரபல்யமான ஆங்கில பத்திரிகையின் வர்த்தக பிரிவு பக்கத்தில் இப்படி ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

The President of a Multi Million Dollar Company Stated that the Corporation had "Scrapped" a Million dollars when a Vice president died. He said "Our Corporation has Spent atleast two million dolllars in Experiments in this Vice President's department of operation under his direction and control and not more than one million of that value he has been able to pass on to his associates"

மேற்குறிப்பிட்டவாறு ஒரு பெரிய மில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆராய்ச்சி திட்டத்தினை தலைமை வகித்து முன் எடுத்த கம்பனியின் உப தலைவரின் திடீர்மரணம் என்பது அக் கம்பனிக்கு ஒரு மில்லியன் டொலர் நட்டத்தினை உருவாக்கியுள்ளது என கம்பனியின் தலைமை அதிகாரி அறிவித்திருந்தார்.

விற்பனைத் துறையின் மனேஜர், இவைகள் தவிர ஏதாவது பெரும் ஆய்வு துறையினை முன் எடுத்து செல்லும் ஒரு விஞ்ஞானி, அல்லது ஒரு மிக பெரிய தொழில் நுட்பவியலாளர் போன்ற ஒரு பொறுப்பாளர் நிலையில் இருந்து ஒரு கம்பனியின் செயற்பாட்டில், அதன் வருமானத்தினை உழைக்கும் சக்திகளில் ஒரு வலுவான சக்தியாக இருக்கும் ஒரு ஆற்றல் படைத்தவரின் மரணம் அல்லது உடல் இயலாமை என்பது திடீர் என கம்பனிக்கு கிடைத்த ஒரு "உதை" போலவே இருக்கும்.

மேலே பேட்டி வழங்கிய கம்பனியின் தலைவர் குறிப்பிடும் போது, மிக பெரிய ஒரு ஆய்வு திட்டத்திற்காக அதில் திறமை, அனுபவம் உள்ள உபதலைவரின் வழி காட்டலில் ஆய்வு முயற்சி நடந்து கொண்டிக்கும் போது, ஏற்பட்ட உயிர் இழப்பு எப்படி கம்பனிக்கு ஒரு பேரிடியாக இருந்தது என்பதனை கம்பனியின் தலைமை நிர்வாகி தமது பேட்டியில் தெரிவித்தார். ஏனெனில் அவ் இடத்திற்கு புதிய ஒரு நபரினை எடுத்து, பயிற்சி கொடுத்து இழப்புக்கு சமமானவரின் நிலைமைக்கு உருவாக்கும் வரை கம்பனிக்கு ஏராளமான செலவுகள் ஏற்படும்.

சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999

இப்படியான நிலைமைகளில் ஒரு கம்பனியினை அல்லது வர்த்தக நிறுவனத்திற்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு ஒரு நிவாரணம் Key Person Insurance" என அழைக்கப்படும்.

இதுவும் ஒருவகை ஆயுள் காப்புறுதியே. ஒரு குடும்ப தலைவரின் இழப்பு என்பதில் குடும்பத்தில் இருக்கும் ஏனையோரின் பாதுகாப்புக்காக உருவாக்கப்படும் ஆயுள் காப்புறுதி போல ஒரு கம்பனியின் ஊழியர் ஒருவரின் இழப்பினால் கம்பனிக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் இதுவாகும்.

இங்கு உயிர் இழப்பாகவும் இருக்கலாம் அல்லது உடல் இயங்க முடியாத நிலையில் நோய் நிலைமை அல்லது விபத்தினால் இயங்க முடியாத நிலைமையாகவும் இருக்கலாம். காப்புறுதி என்பது கை கொடுக்கின்றது. இத்தகைய ஒப்பந்தங்களை விண்ணப்பங்களை முன் எடுக்கும் போது

- என்ன நோக்கத்திற்காக இவ் ஒப்பந்தம் செய்யப்படுகின்றது.
- கம்பனி அல்லது வியாபார நிறுவனத்தின் பெறுமதி அளவு, வலிமை
- கம்பனியின் லாபகரமான நிலைமைகள் போன்ற தகவல்கள் உட்பட காப்புறுதி செய்து கொள்ள போடும் ஊழியரின் உடல் நலைமை என்பதும் பரிசீலனை செய்துகொள்ளப்படுகிறது.

ஆக கூடுதலாக ஊழியரின் வருட சம்பளத்தின் பத்துமடங்கு தொகைக்கே காப்புறுதி செய்து கொள்ள கம்பனி அனுமதிக்கும். அதாவது ஊழியரின் வருட சம்பளம் ஒரு இலட்சம் டொலர் என்றால் $100,000 X 10 = $1000,000
என்ற அடிப்படையில் ஊழியரின் சம்பளத்தினை அடிப்படையாக வைத்து காப்புறுதி தொகை நிர்ணயிக்கப்படுன்றது.

இங்கு ஊழியருக்கு உயிர் இழப்பு அல்லது உடல் இயங்கா நிலைமை ஏற்பட்டால் நிவாரணத்தினை கம்பனி வரி எதுவும் செலுத்த தேவையில்லாத தொகையாக பெற போவதால் மாத மாதம் ஒப்பந்தத்திற்காக செலுத்தும் கட்டணத்தினை கம்பனியின் செலவாக கருதி வருமான வரியில் எதுவிதமான சலுகையினையும் எந்த சந்தர்ப்பத்தில் அனுபவிக்க முடியாது.

குப்பிளான் விக்கினேஸ்வரா மக்கள் மன்றம் (கனடா கிளை) நடத்தும்

கோடைகால ஒன்று கூடல் & விளையாட்டு போட்டிகள்

காலம்: ஓகஸ்ட் 05, 2006 சனிக்கிழமை காலை ஒன்பது மணி
இடம்: ஸ்காபரோ மோர்னிங் சையிட் பூங்கா மைதானம்
(கடந்த வருடங்களில் நடந்த இடம்)

முக்கிய அறிவித்தல் - கிராமத்து மக்களுக்கு கலைவிழாவில் வெளியிடப்படும் சஞ்சிகையில் கிராமத்து வாசனையினை மையமாக வைத்து, சஞ்சிகை, கவிதை எழுத விரும்புவோர் கலைவிழாவில் பங்குபற்ற விரும்புவோர் ஆங்கிலம் தமிழ் மொழி போட்டிகளில் பங்கு பற்ற விரும்பும் சிறார்கள் யாவரும் ஓகஸ்ட் 05, 2006 க்கு முதல் (இறுதி திகதி) தங்கள் பெயர் விவரங்களை பதிவு செய்யவும்.

"செம்மண் இரவு" கலைவிழா

காலம்: ஓகஸ்ட் 26. 2006 சனிக்கிழமை மாலை ஐந்து மணி
இடம்: கனடா கந்தசுவாமி கோவில், 733, பேர்ச்மவுண்ற் வீதி, ஸ்காபரோ
தொடர்புகளுக்கு: மதி- 416.889.2254 சக்தி- 416.839.7258 அப்பன்- 416.280.5523

18 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

யோகாஸ்

குறுக்கு எழுத்துப் போட்டி இல. 176



இட - வல

1. மேற்கோள்
5. கதிரவன்
6. மேல் மாடம்
7. உதரம் (வல-இட)
9. பழுப்பு நிறம் (வல-இட)
10. பிரி
12. யாழ். தீவகத்தில் அரச படு கொலைகள் நடந்த இடம்

மேல் - கீழ்

1. எக்காலத்தும்
2. வணங்கு
3. அருச்சுனனின் வில்
4. எழுதிய ஓலை (கீழ்-மேல்)
7. மன்னாரில் அரச படு கொலைகள் நடந்த இடம்
8. அம்பு எய்ய உதவுவது
10. கல்
11. காணியை பாவிக்க செய்யும் ஒப்பந்தம் (கீழ்-மேல்)
13. இளங்காய் (கீழ்-மேல்)

சு	வி	ற்	ச	லா	ந்	து	
ற்			ரி			வ	
ற		து	த்	சு		ங்	
த்		ம	தி		தொ	கு	தி
தா	ய்		ர		ட்		வ
ர்			ம்	ட	டி	ட்	க
	ஏ	சு					ப
உ	ரி	மை	க்	கு	ர	ல்	

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் July 28, 2006க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

175இல் வெற்றி பெற்றோர்
1) K. Partheepan, Toronto
2) Uma Varaprasatham, Mississauga

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

(416) 267-0408 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

கவிஞர் 'சேரனின்' மாணவன் முத்துராஜாவின் 'சுனாமி' கவிதைத் தொகுப்பு, வெகுவிரைவில் உங்கள் வசம் கிடைக்கும் என்பதை அறியத் தருகிறேன்.

வெளிச்சம்

கொதிக்கின்ற சுடு மணலின்
கொப்பளங்கள் போன்ற
ஒளி தரும் நீரூற்றின் ஓரம்
தலை அசைத்து நிற்கும்
பேரீஞ்சுத் தென்னைகள்
அதனருகே
ஒட்டகத்தை நிறுத்திக்
கடிவாளக் கயிற்றை
என் அரையில் செருகி
முட்டுக்கால் நிலம் பதித்து
தாழ்ந்து தலை கவிழ்ந்து
முகம் நிமிர்த்திப்
பிறை பார்த்துத்
தரையில் முத்தமிட்டுத்
தா என்று கேட்டதற்குப்
பேரீச்சம் பழத் தசையை
ஒட்டகப் பாலுடன்
பிசைந்து கலந்து ஈந்த
மன அமைதியின்
வற்றாத அருவி ஊற்றில்

புகுந்து வளைந்தோடும்
தேன் கலந்த காற்றலைகள்
மென்மேலும்
புதிய ராகங்களுடன்
புதிய உலகைப்
புனிதமாக்கவேண்டும்.

முத்துராஜா

tvi Tamil Vision Int. & cmr Diversity FM 101.3

Presents

South Asian Festival

मेला भेला میلہ

கொண்டாட்டம்

இம்முறை 3 மிகப்பெரிய மண்டபங்கள்!
400 வர்த்தகச் சாவடிகள்!
5 அரங்கங்களில் அனைவரையும் கவரும் இடைவிடாத நிகழ்ச்சிகள்!

வர்த்தகச் சாவடிகள் மிக வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன...
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்!!!

CELEBRATING DIVERSITY
TRADE SHOW, FOOD, MUSIC AND DANCE FESTIVAL

Call today for your trade booths!

416.593.9300 ext.233 or 234

SEPTEMBER
02 & 03
SAT SUN
10 AM. - 10 PM.
@
INTERNATIONAL CENTRE
6900 Airport Road
(Airport Rd. & Derry Rd.)
www.tvicmrfestival.com

pizza pizza

ASIYANS
416-438-6568

Jayasaji Jewellery Ltd.
416-431-1536

360tel
1-800-9-360tel

SMI
STANDARD MORTGAGES INC.
Residential & Commercial
416-993-2638 or 416-889-1110

Niru BRAND®
FOOD PRODUCTS
NIRU
நிரு பிரான்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
Niru BRAND
Pure Gingelly Oil
(Sesame Oil)
Niru
Kitul Treacle
CHILLI SAUCE
MIXED FRUIT
Niru
CONDENSED
Sweetened Condensed Milk
300ml.
SPICY COFFEE
Niru
COW GHEE
Niru BRAND
JACK
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

பரம்பரை வீட்டு வைத்தியம்

கடந்த இதழ் தொடர்ச்சி

(21) இரும்புச்சத்து கூடுவதற்கு - இரத்தத்தில் பிராணவாயுவை சேர்ப்பதற்கு உதவுவது செங்குருதி. இதில் போதிய இரும்புச்சத்து இல்லாவிடில் செங்குருதி உருவாகாது. இதனால் காமாளை நோய் ஏற்பட்டு உயர் ஆபத்து நேரும். விரைவாக உடம்பிற்கு இரும்புச்சத்து சேர்ப்பதற்கு உணவில் ஈரலை சேர்த்தால் விரைவாக இரும்புச்சத்து இரத்தத்தில் கூடும். சைவ உணவு உண்பவர்கள் அதிகம் வெங்காயம், வாழைக்காய், உருளைக்கிழங்கு, வாழைத்தண்டுக்கறி, பூசனிக்காய், தக்காளி, பருப்புவகை, பேரீச்சம்பழம் கீரைவகை உண்பதால் இரும்புச்சத்து உடம்பில் கூடும். இத்துடன் உடற்பயிற்சி செய்யவும்.

டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை
Tele. - 416.291.3022
E.Mail-DRVPS@Hotmail.com

(22) இடுப்புவலிக்கு பத்து - இடுப்பு வலிக்கு முருங்கை இலையையும் உப்பும் சேர்த்து இடித்து சாறுபிழிந்து அதைப்பத்துப்போட்டு நெல்லிரசம் ஒரு கிளாஸ் காலை, மாலை குடித்தால் குணமாகும். நெல்லிவற்றலை கசாயம் காய்ச்சி காலை, மாலை குடித்தாலும் விரைவில் குணமாகும். உணவில் அத்திப்பழம், தக்காளிப்பழம், அன்னாசிப்பழம் ஆகியவற்றைச் சேர்க்கவும். ஒரே இடத்தில் அதிகநேரம் இருந்து வேலை செய்பவர்களுக்கும் இடுப்பு வலி வருவதுண்டு. அடிக்கொருதரம் எழுந்து நடத்தல் அவசியம். தினம் அரைமணி நேரம் நிற்காது நடத்தல் இந்த வலி வராது தடுக்கும். மலச்சிக்கலை தடுக்க வேண்டும்.

இதற்கு அதிக நார்ச்சத்து உள்ள பழவகைகள் சாப்பிட்டு அதிக சுட்டு ஆறிய நீர் குடிக்க வேண்டும். உடம்பில் போதிய இரும்புச்சத்து இல்லாமை இடுப்பு வலிக்கு ஒரு முக்கிய காரணம். எனவே அதிக இரும்புச்சத்து உள்ள பட்டாணிக்கடலை, கோதுமை, கீரைவகை, பேரீச்சம்பழம், ப்ரூண்ஸ் பழம் சாப்பிடவும். பவளமல்லி இலையை உலர்த்தி இடித்து அவித்துச்சாறு பிழிந்து ஒரு அவுன்ஸ் தினம் குடித்தாலும் இடுப்பு வலி குணமாகும் என்கிறது ஒரு வாகடம்.

(23) இஞ்சியின் மகத்துவம் - இஞ்சி பல நோய்களைக் குணப்படுத்த வல்லது. தொண்டை, மூக்கு நோய்கள், அஸ்மா, பாண்டு, நுரை ஈரல் நோய்கள், வயிற்றில் கட்டிகள், யானைக்கால் நோய், கல்லீரல், மூத்திரக்கோளாறுகள் ஆகியவற்றை கட்டுப்படுத்த வல்லது. எனவே சாப்பாட்டில் ஓரளவு இஞ்சியை தினம் சேர்த்துக்கொள்வது சாலச்சிறந்தது.

(24) ஈரல் நோய்க்கு - இந்த கல்லீரல் நோய் உள்ளவர்கள் திராட்சைப்பழம், முந்திரி வற்றல், திராட்சைரசம் போன்றவற்றை தினம் பாவித்தால் கல்லீரல் பலப்பட்டு நோய் நீங்கிவிடும்.

(25) ஈளைக்கு - சிலருக்கு உதட்டில் வெண்மை ஏற்படுவதுண்டு. இது வெண்குஷ்டம் அல்லது இதை 'லூக்கோடேமா' (Leucoderma) என்பர். இதற்கு வில்வம் ஓட்டை இடித்து அரைத்து தாய்ப்பாலில் உரைத்து பூசி வந்தால் குணமாகிவிடும்.

(26) இதழ்களைச்சிவக்க வைக்க - வாடாத கொத்தமல்லி இலைச்சாற்றை இரவு படுக்கப்போகுமுன் பூசிவந்தால் சில நாட்களில் உதடு சிவந்து அழகாக இருக்கும். கிளிசறினினால் பல்லை இரவில் துலக்கவும். காய்கறி அதிகம் உண்ணவும்.

(27) உள்நாக்கு வளர்ந்தால் - இப்படி உள்நாக்கு வளர்ந்து இருமல் ஏற்படின் வெள்ளைப்பூண்டை (உள்ளியை) நசுக்கி சாறு எடுத்து அந்தச்சாற்றை உள்நாக்கில் தினம் பூசிவந்தால் இரண்டு, மூன்று நாட்களில் உள்நாக்கு சுருங்கி இருமலும் குணமாகும். மூன்று அவுன்ஸ் வில்வம் சாறும், மூன்று அவுன்ஸ் துளசிச்சாறும் எடுத்து அத்துடன் ஒரு போத்தல் நல்லெண்ணை விட்டு நன்கு காச்சவேண்டும். அப்பொழுது மணல்போல் அடியில் சிவப்பாக வண்டல் வரும், இந்தப்பதத்தில் எடுத்து ஆறவிட்டு ஒரு புட்டியில் வைத்துக்கொண்டு இந்த எண்ணையை உள்நாக்கில் தினம் தடவவும். இந்த எண்ணையை வாரம் ஒருமுறை தலைக்கு தேய்த்து முழுகவும், இப்படி செய்தால் உள்நாக்கு மறையும்.

(28) உறுப்புக்கள் பலப்பட- எலுமிச்சம் சாற்றில் தேன் கலந்து உண்டு வந்தால் இரைப்பை, கல்லீரல், சிறுநீரகம் முதலிய உறுப்புக்கள் பலப்படும்.

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் **ரவி நடராஜா**

தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(17 Years Insurance Claims Experience)

416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON

mhc

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough	Tonsillitis	Migraines	Prostatitis
Flu	Gout	Hair Loss	Obesity
Depression	Arthritis	Diabetes	Hemorrhoids
Anxiety	P.M.S	Cystitis	Stumatitis
Asthma	Leucorrhea	Cancer	Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

QUICK IMMIGRATION SERVICES

To Visit Canada

To Work in Canada

To Study in Canada

To Settle in Canada

To Seek asylum

To Represent before IRB

Contact: Dheenadayalan Subramanian,
Certified Canadian Immigration Consultant
(CSIC ID #: M063695)
1200 Markham Road, Suite #:105, Toronto ON Canada
Tel: (416) 834 8298 Fax: (416) 283 3567
E-Mail: dheena_subramanian@yahoo.com
Website: www.allcanadaimmigration.ca

151

நகைச்சுவைத் தொடர்

ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

வானம் கறுத்தது
சிறு முகம் கறுத்தது
1983ஆடி கறுத்தது
ஆடி கறுத்தது

மழையது வந்தது
கண்ணீர்வழிந்தது
உயிர்கள் எரிந்தன்.
கறுப்பு யூலை

அடி கோல் கமோன் ஓ நோ
ரூபனின் வீட்டில் உதைபந்தாட்ட உலகக்கிண்ணம் தொடங்கிய நாளிலிருந்து இதே சத்தம்தான். ஒரு நாடு வெல்ல இன்னொரு நாடு தோல்வியைத்தழுவ தோல்வியை தாங்கமுடியாமல் அந்நாட்டுமக்கள் தேம்பித்தேம்பி அழும் காட்சி பாக்கிறவர்களையே கண்கலங்க வைக்கிறது.

விளையாட்டிலேயே தோல்வியை, இழப்பைத்தாங்க முடியாமல் அவர்கள் அழுகிறார்கள். அப்படியென்றால், பெற்றதாய் பிறந்த மண் திரிந்த வளவு ஓடிய ஒழுங்கை ராகங்கள் தெரியாமல் நாங்கள் பாடிய பழமரச்சோலைகள் செல்லம் கொஞ்சிய உறவுகள் கடினப்பார்வையாலும் பேச்சாலும் எம்மை நல்லவர்களாக்கிய எமது ஊரவர்கள்...

காலையும் மாலையும் கணீரென போட்டி போட்டு ஒலிக்கும் அம்மன் முருகன் விநாயகர் ஆலயமணிகள் எல்லாவற்றையும் இழந்த எமது மனம் என்ன பாடுபடும். போட்டியில் வெற்றி தோல்வி சகஜம். ஆனால் வாழ்க்கையில் ஒருமுறை இழந்ததை மீண்டும் பெறமுடியுமா?

உலகர் மனம் செம்பாட்டு மண்ணில் கால்பதித்து வந்தது.
கோல்.. .. ரூபனின் வீடு அதிர்ந்தது.
செக்கண்ட் புளோர் செல்லம்மா பெலத்து கை தட்டினா. கனடா வரும்பொழுது பிரான்ஸ் ரான்சிற் அதற்காக செல்லம்மா பிரான்சிற்கு சப்போட். ஆனால் ஆட்டிலறி அன்னம்மா இத்தாலிக்கு சப்போட். ஆட்டிலறி அன்னம்மாவின் பெறாமகள் இத்தாலிக்கு போக சிறுதொகை பணம் கொடுத்து உதவியது அன்னம்மாதான். அன்னம்மாவும் பலதடவை இத்தாலி போக திட்டமிட்டு இந்த வருடம்தான் சரிவரும்போலிருக்கு. அதனால் ஆட்டிலறி அன்னம்மா இத்தாலிக்கு சப்போட்.

இடிப்பதும் முட்டி மோதுவதும் ஆவேசம் கோபம் கொள்வதும் சகிக்க முடியவில்லை. உதைபந்தாட்டம் பார்க்க பார்க்க உலகருக்கு உரு ஏறியது. ஆளையாள் தரம் குறைவாக பேசுவதும் தீராக்கோபம் போராய்முடியும்.

ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம் என்று தெரியாமலா சொன்னார்கள் பெரியோர்?.
குற்றம் குற்றமேயென்று சொன்ன நக்கீரனை கோபத்தில் நெற்றிக்கண்ணால் எரித்தார் சிவன். கண்ணகியின் கோபம் மதுரையை எரித்தது.

அமெரிக்க ஜனாதிபதியின் கோபம் ஈராக் ஆப்கானிஸ்தான் தினமும் எரிகிறது. அனுமனின் வாலில் அரக்கர் மூட்டிய தீ இன்றுவரை எரிகிறது.

உலகர் தனது வாழ்நாளில் முருகேசருடன் தாமோதரத்துடன் வீட்டில் வந்து அட்டகாசம்பண்ணி வாக்குவாதமும் ஆர்ப்பாட்டமும் செய்யும் ஆட்டிலறி அன்னம்மா செக்கண்ட்புளோர் செல்லம்மாவுடன் எத்தனைதரம் கோபித்திருப்பார் மனக்கசப்புப்பட்டிருப்பார்.

கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளா சீடன் ..

எத்தனை அனுபவரீதியாக தத்துவங்களையும் கருத்துக்களையும் பெரியவர்கள் சொல்லிவைத்தார்கள்.
உலகண்னை ஆடிப்பிறப்புக்கு சுவீற் சூப் காச்சேல்லியோ என்றா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

உலகரும் ராசம்மாவும் திணறிப்போனார்கள். ரூபி பெலத்து சிரித்தபடி அன்னம்மா அன்ரி இஞ்சை எல்லாரும் தமிழ்தானே கதைக்கிறம் ஏன் ஆடிப்பிறப்புக்கு கூழ் ஆடிக்கூழ் என்றுசொல்லாமல் சுவீற் சூப் என்று சொல்லுறீங்கள் என்று கேட்க ஆட்டிலறி அன்னம்மா உலகரை புன்முறுவலுடன் பார்த்தார். ரூபி தடக்கி தடக்கி தமிழ் கதைத்த காலம் போய் இப்போ ஆட்டிலறி அன்னம்மா தடம்புரண்டு ஆங்கிலம் தன் எண்ணத்திற்கு மொழிபெயர்த்து கதைப்பது எல்லோருக்கும் சிரிப்பாக இருந்தது.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.
- நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

இத்தனை அமளிதுமளிக்குள்ளும் உலகர் வேட்டி சால்வையுடன் வெளிக்கிட முருகேசர் வரவும் சரியாக இருந்தது.

ஆடி அமாவாசை தினத்திற்கு இருவரும் கோயிலுக்கு புறப்பட ராசம்மாவும் தனது தகப்பனை நினைத்தபடி விரதத்திற்கு சமையலை ஆரம்பிக்க வழுமைபோல ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் ராசம்மாவுக்கு மரக்கறி வெட்டியபடி. ஊர் வம்புகளை அலசத்தொடங்கினர்.

யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

SAFETY TRUCKS

Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z

In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

19 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL

Fork Lift licence From $75.00

Truck licence A-Z From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618/416.913.9574

416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

செதுக்கப்பட வேண்டிய கல்

ஒடும் நீர் உறைவதில்லை 16

வீதியில் நாம் நடந்து செல்கின்றபோது எத்தனையோ கற்கள் நமது கால்களுக்குள் மிதிபடுகின்றன. எத்தனையோ கற்களை நாம் கடந்து செல்கின்றோம். சில கற்களை மிகவும் சுவாரஸ்யமாக ரசிக்கின்றோம். ஒருசில கற்களைத் தலைதாழ்த்தி வணங்குகின்றோம். இங்கே கற்கள் கற்களாக இருப்பினும் நாம் கொடுக்கும் மரியாதை அந்தக் கற்கள் வெளிப்படுத்தும் தகவல்களில் இருந்து உருவாக்கப்படுகின்றன. இந்தத் தகவல் எவ்வாறு உருவாகின்றது என்பது தான் நாம் அடிப்படையில் உணர்ந்து கொள்ளவேண்டிய முக்கியமான விடயம்.

ஒரு கல் சமூகத்திற்குத் தரும் தகவலின் சூத்திரதாரி அந்தத் தகவலை அக்கல்லின் மூலம் வெளிப்படுத்தும் சிற்பி தான். ஒரு சாதாரண கல் ஒரு சிற்பியின் கற்பனாசக்தியால் புதிய உருவம் ஒன்றை அமைத்து அந்தச் சிற்பியின் சிந்தனை வடிவத்தை வெளிப்படுத்துகின்றது. இங்கே அடிப்படையில் ஒரு கல் கல்லாக இருப்பினும் சிற்பியின் எண்ணக்கருக்களுக்கு ஏற்ப ஒரு சிலையாக வடிவம் பெறுகின்றது. அதாவது ஒரு கல்லுக்குள் இருப்பது எண்ணில் அடங்காத சிற்பங்கள். ஆனால் ஒரு சிற்பியின் சிந்தனைக்கேற்ப அதன் உருவம் வடிவமைக்கப்படுகின்றது.

இங்கே ஓர் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கல் சிற்பியின் சிந்தனைக்கேற்ப ஒரு சிலையாக வடிக்கப்படும்போது அந்தச் சிற்பியின் செயற்பாடு என்னவெனில் தனது கற்பனையில் உள்ள உருவத்தை அந்தக் கல்லில் கொண்டுவருவதற்காக அந்தக் கல்லில் தேவையற்ற பகுதிகளை அகற்றுவதுதான். அதாவது ஒரு கல்லின் தேவையற்ற பகுதிகளை அகற்றும் போது அக்கல்லில் இருந்து ஒரு சிலை தானாகவே உருவாகின்றது. எனவே ஒரு சிற்பி ஒரு உருவத்தை வடிப்பதற்கு அந்த உருவத்துடன் தொடர்பில்லாத தேவையற்ற பகுதிகளை எவ்வளவு திறமையாக அந்தக் கல்லில் இருந்து அகற்றுகிறாரோ அவ்வளவு திறமையான ஒரு சிலையை வடிக்கிறார்.

இவ்வாறு கல்லைச் சிலையாக்கும் நுட்பம் சிற்பிகளுக்கு மட்டும் தான் உண்டு. அதிஷ்டவசமாக நாம் எல்லோரும் சிற்பிகளே. ஏனெனில் பெற்றோராகிய நாம் சிற்பிகள். நம் குழந்தைகள் தான் கற்கள். இந்தக் கற்கள் ஒவ்வொன்றும் செதுக்கப்படவேண்டிய கற்களே. ஒரு சிற்பி சிலை ஒன்றை வடிப்பதற்குப் பயன்படுத்தும் ஆயுதம் உளி. இந்த உளியைப் பயன்படுத்தும் நுட்பத்தை பொறுத்து சிலையின் வடிவம் அமைகின்றது. அதுமட்டுமன்றி இந்த உளியும் செதுக்கப்படும் கல்லும் மிகவும் கெட்டியானவை. எனவே உளிக்கும் கல்லுக்குமான போராட்டம் தவிர்க்கமுடியாதது. இருப்பினும் உளிவாங்கும் அடியின் வேதனையும் அந்த உளியின் தாக்கத்தைத் தாங்கும் கல்லும் இறுதியில் ஒரு சிலையாக அமையும் போது ஏற்படும் மகிழ்ச்சியால் முற்றாக மறக்கப்படுகின்றது.

KG Master
416.725.5112

இங்கே ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனிக்க வேண்டும். பெற்றோராகிய நாம் சிற்பிகள். எமது மனம் தான் உளி. குழந்தைகளின் மனம்தான் கல். இந்த ஒழுங்குமுறையைச் சிறப்பாக நாம் உணர்ந்து கொள்வோமாயின் எமது எதிர்பார்ப்புக்கு ஏற்றமுறையில் தரமான சிலைகளை நாம் உருவாக்கலாம். எவ்வாறெனில் சிற்பியாகிய நாம் உளியாகிய நமது மனத்தால் கல்லாகிய குழந்தைகளின் உள்ளத்தை செதுக்குவதன் மூலம் என்றும் ஆனந்தம் தரும் சிற்பமாக அவற்றை அமைத்து விடலாம்.

எனவே ஒரு கல் சிலையாவது ஒரு சிற்பியின் கையில் இருப்பது போல் ஒரு குழந்தையின் உள்ளமும் பெற்றோரால் தான் செதுக்கப்படவேண்டும். இங்கு நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத உண்மை என்னவெனில் ஒவ்வொரு குழந்தையின் உள்ளமும் செதுக்கப்பட வேண்டியது என்பதே. இவ்வாறு செதுக்கப்படும் குழந்தை களின் உள்ளம் செதுக்குகின்ற சிற்பியின் - பெற்றோரின் சிந்தனை முறையைப் பொறுத்து வடிவமைக்கப் படுகின்றது. இதனால் தான் சிற்பியாகிய பெற்றோரின் சிந்தனை முறைகள் நேர்மையானவையாகவும் நேர்த்தி யானவையாகவும் அமையும்போது அவர்களது உளியாகிய உள்ளம் குழந்தைகளின் உள்ளத்தில் மாற்றத்தைக் கொண்டு வருகின்றது. அதாவது குழந்தையின் எதிர்காலம்பற்றிய எதிர்பார்ப்பு வடிவமைக்கப் படுகின்றது.

ஒரு குழந்தையைச் சிறந்த குணநலன்களுடன் நாம் உருவாக்குவதற்கு அக்குழந்தையின் உள்ளத்தில் வேண்டப்படாத விடயங்களை அகற்றுவதுதான் ஒரேவழி. ஒரு கல் சிலையாக வடிக்கப்படுவதும் தேவையற்றவற்றை அகற்றுவதால் தான். இங்கே தேவையற்றவற்றை அகற்றுவதற்கு சிற்பியும் உளியும் அதாவது பெற்றோரும் அவர்களது மனமும் தயக்கம் காட்டக்கூடாது. சிலவேளைகளில் குழந்தைதானே என்ற கணிப்பில் பெற்றோர்கள் அகற்றப்பட வேண்டியவற்றை அகற்ற வேண்டிய நேரத்தில் அகற்றுவதற்குத் தயங்குகிறார்கள். இது தவறு. ஏனெனில் உருவாக்கப்படும் சிலை மாறுபட்டதாக அமையும். ஒரு சிலையைச் சிற்பி உருவாக்கும் போது உளியின் தாக்கம் தவிர்க்கப்படமுடியாதது. இந்தத் தாக்கத்தின் வலி கல்லுக்கு மட்டுமல்ல உளிக்கும் தான். கல்லுக்கு வலிக்கும் என்பதற்காக உளியை உபயோகிக்காவிட்டால் கல்லு கல்லாக இருக்குமேயன்றி சிலையாவதற்கான வாய்ப்பே அற்றுப்போய்விடும்.

உளிதாங்கும் கற்கள்தான் சிலையாகும். இங்கே ஒரு விசேடமான விடயம் என்னவென்றால் குழந்தைகளின் மனம் உளிதாங்கக் கூடியவை என்பது தான். அதாவது குழந்தைகள் அனைவரும் உளிதாங்கக்கூடிய கற்கள். எனவே பெற்றோர்கள் தமது உள்ளமாகிய உளியைப் பயன்படுத்தி கல்லாகிய குழந்தைகளின் மனத்தில் தேவையற்றவற்றை அகற்றியே ஆகவேண்டும். பொறாமை, சுயநலம், கோபம், ஈயாமை, இறுமாப்பு, பொய்யுரைத்தல், களவு, மற்றோரை மதியாமை, தன்னம்பிக்கையின்மை, நேரத்தை வீணடித்தல், பெற்றோர் சொற்கேளாமை, இறை நம்பிக்கையின்மை போன்றவற்றை குழந்தைகளின் உள்ளத்தில் இருந்து அகற்றுவதன் மூலம் சிறந்தவர்களாக அவர்களை உருவாக்கமுடியும்.

குழந்தைகளிடம் காணப்படும் தேவையற்ற பழக்கவழக்கங்களை அகற்றுவதற்குப் பல்வேறு வழிகளில் உள்ளன. கலந்துரையாடுதல், அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தைப் புரியவைத்தல், முற்போக்குச் சிந்தனையுள்ளவர்களுடன் சேர்த்தல், தரமான புத்தகங்களை வாசிக்கப்பழக்குதல், திறமைகளைப் பாராட்டிப் பரிசளித்தல் போன்றவை சில. பெரும்பாலான சந்தர்ப்பங்களின் கண்டிப்புக்கூட ஒரு பிரதான முறையாகத் தேவைப்படும். கண்டிப்பு எனும்போது அடித்தல், உதைத்தல் என்று பொருள் கொள்ளக்கூடாது. அன்பான கண்டிப்பாகவும் அதுவும் சரிப்படாதவிடத்து சலுகைகளைக் கட்டுபடுத்தும் கண்டிப்பாகவும் இருக்கலாம். எது எப்படி இருப்பினும் ஒரு குழந்தையின் உயர்வுக்கு கண்டிப்பு அவசியமாயின் பெற்றோர்கள் அதை நடைமுறைப்படுத்துவது அவசியம். ஏனெனில் கண்டிக்காத பெற்றோர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இந்தத் தண்டிப்பு உளவியல் சார்ந்ததாகப் பல பெற்றோர்களிடம் காணப்படுகின்றது.

ஆம் பெற்றோர்களே! ஒவ்வொரு குழந்தையும் செதுக்கப்படவேண்டிய கல். சிற்பிகளாகிய நாம் உளியின் வேதனையைப் பொருட்படுத்தாது சிலையை உருவாக்கித் தான் ஆகவேண்டும். ஏனெனில் அழகான சிலை ஒன்றினால் ஆனந்தப்படுபவர்கள் எண்ணில் அடங்காதவர்கள். அது சிலைக்கும் சிறப்பு சிற்பிக்கும் சிறப்பு.

கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை

Education = Intelligence + Character

KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611
(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

Self-Confidence, Self-Image
Self-Discipline, Patience
Obedience, Positive Thinking
Winning Attitude,
Taking Responsibility
Leadership Qualities



YARL WINDOW
BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS
- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

JENNY AUTO SALES *INC.*
(Kennedy & Steeles)

கடந்த பத்து வருடங்களாக Jenny Auto sales, Markham மூலம் பல்லின மக்களின் நல் ஆதரவைப்பெற்ற Anton தற்போது வீடு விற்பனைத்துறையிலும் முன்னணியில் திகழ்கின்றார்.

2002	Honda Accord	-	13,000.00
2001	Toyota Corolla	-	8,500.00
2003	Toyota Corolla	-	10,500.00
2002	Honda Civic	-	8,995.00
2002	Honda RV	-	14,995.00
1999	Honda Civic	-	7,500.00
1996	Toyota Corolla	-	3,995.00
1997	Honda Accord	-	5,995.00
1998	Toyota Corolla	-	6,500.00
1998	Toyota Camry	-	6,995.00
1997	GM Savana	-	4,500.00
2000	Dodge Caravan	-	4,500.00

இன்னும் பல நல்ல வாகனங்கள் எம்மிடம் உள்ளன. We do vehicle appraisals
Anton: (416) 575-5055 Rajah: (905) 470-0048
Office: 4440 Steeles Ave., East, Markham, ON, L3R 0L4

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 81

தீர்க்கக்கூடிய பிரச்சிகளைத்தான் முன் வைக்கிறான் இறைவன் எமக்கு. பொன்னைப் புடமிடுவது போல பிரச்சினைகள் எமக்குப் பாடம் படிப்பித்து எம்மை உயர்த்துவதற்காகவே வருகின்றன.

தவறு செய்யாதவர்கள் உலகில் ஒருவருமே இல்லை. உங்கள் தவறுகளை மறைக்க நீங்கள் புனையும் கட்டுக்கதைகளைக் கைவிட்டு, உங்கள் வாழ்வின் உண்மை நிலையை நீங்கள் உணர்ந்து வாழ்ந்தால் எவ்வளவு அற்புதமாயிருக்கும்? இன்றுவரை, உனது ஜீவியத்தின் நிஜங்களை ஒப்புக் கொள்வதைத் தவிர்த்து நீ மறுதளித்து வந்திருக்கலாம். நீ தேர்ந்தெடுக்கும் உனது ஆசைகள் எதையும், உன்னால் பூர்த்தி செய்து கொள்ளமுடியும் என்பதை நீ மறந்திருக்கலாம். உனக்கு இஷ்டமான மாதிரி நீ உலகில் வாழலாம். இன்று முதல் உனது கட்டுக்கதைகளையெல்லாம் மூட்டை கட்டித் தூர வை. பிச்சையெடுக்க விரும்பும் உனது மனப்பான்மையைக் கைவிடு. உன்னைச் சுற்றிப் பார்! உன்னைப் பார்! உனது வாழ்வைப் பார்! நீ காண்பவற்றைப் பற்றிய உண்மைகளைக் கூறு!

எனது வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்து, அதைப் பற்றிப் பேசுவதற்கும் யோசிப்பதற்கும் இன்று நேரம் செலவழிக்கின்றேன்.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-270-1214

லலிதா புரூடி

ஒருவருக்குமே பிரச்சினைப்பட விருப்பமில்லை. ஆனால் உண்மையாகப் பிரச்சினைப்பட விரும்பினால், நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா? ஏதாவது ஒரு சங்கதி உனக்குத் தெரிய வந்தும், அதைப்பற்றிய சகலதும் உனக்குத் தெரியும் என்பதை நீ நன்கு உணர்ந்தும், அதைப் பொருட்படுத்தாது உனக்கு ஒன்றுமே தெரியாதது போல நடித்தாயானால், நிச்சயம் உனக்குக் கரைச்சல் வரத்தான் செய்யும். உதாரணத்திற்கு ஒரு செயற்பாட்டிற்குப் பதிலாக மற்றவர்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதைப் பார்த்து, உனக்குப் பொருந்தாவிடினும் அதைப்போலவே நீயும் செயற்படும்போது தான் வழக்கமாக பிரச்சினைகள் உருவெடுக்கின்றன. இறைவனின் பொறியாம் உனது உள்ளுணர்வை, உனது மனச்சாட்சியை மதிக்காது, வெளியிலிருந்து மற்றவர்களிடமிருந்து வருபவற்றால், உனது செய்கைகளை நியாயப்படுத்தி உறுதியாக்கி, ஸ்திரப்படுத்த நீ முனையும்போது, உனக்குத் தெரிந்தவற்றை தெரியாத மாதிரி போலியாக நீ செயற்படுவது, நிச்சயம் உனக்கு நிறைய பிரச்சினைகளை உருவாக்கக் கூடும்.

உனக்குத் தெரிந்தவற்றை மறைத்து, உனக்கு ஒன்றுமே தெரியாதமாதிரி உண்மைக்குப் பாதகமாகச் செயற்பட நீ முயலும்போது, நீ இப்படி நடப்பது பிழை என்பதை நீ கட்டாயம் உணர்வாய். இத்தகைய தருணங்களில் உனது தொண்டை வரண்டு நாக்கு உலர்ந்து விடும். உனது வயிற்றைக் கலக்கும். இருதயம் படபடவென வேகமாக அடிக்கும். உனது மனமே "ஐயோ! இதை உடனே நிறுத்து! நிறுத்து! என அலறும்! உனது சுயத்தையே நீ மறுத்து, உனக்கு தெரிந்ததை தெரியாத மாதிரி நடிக்க முயற்சிக்கிறாய் என்பதால் தான் உனது மனது இப்படித் துடித்து அலறுகிறது. அத்துடன் உனது ஆன்மாவும் உன் செயற்பாட்டை ஆமோதிக்காது உன்னைக் கண்டிக்கிறது. அது உன்னைச் சும்மா விடாது என்பதும் இதன் அர்த்தம்.

உனக்குத் தெரியும் என நீ நன்கு உணர்பவற்றை தெரிந்தவற்றை, கொஞ்சங்கூடத் தெரியாதமாதிரி நீ வேஷம் போட்டு நடிப்பது, வாழ்விற்கும், உனது உள்ளார்ந்த சக்திக்கும், உனக்கு இறைவன் இதுவரை அளித்திருக்கும் ஆசீர்வாதங்களிற்கும், நீ செய்யும் மிகப்பெரிய அவமரியாதை, அப்பட்டமான துரோகம் என்பதைப் புரிந்து கொள். மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது உனக்கு நன்கு தெரியும். ஏன் அவர்கள் அப்படிச் செயற்படுகிறார்கள் என்பதும் உனக்குத் தெரியும். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அவர்கள் நடத்தை உனக்குக் காட்டிக் கொடுக்கின்றது. நீ என்ன செய்யவேண்டும் என்பது உனக்கு நன்கு தெரியும். இனிமேல் எதைச் செய்யாது நிறுத்த வேண்டும் என்பதையும் நீ அறிவாய். நீ அறிந்தவற்றை மறைத்து, அவை உனக்குத் தெரியாதமாதிரி வற்புறுத்தி திரும்பத் திரும்ப போலியாக நீ நடிக்க முற்படும்போது உனக்கு நிறையப் பிரச்சினை ஏற்படும். இது உனக்குத் தெரியும்.

ஒரு விடயத்தை அறிந்தவுடன், அதைப்பற்றி எனக்குத் தெரியும் என்பதை மறுக்காது ஒப்புக்கொள்ள நான் இன்று உடன்படுகிறேன்.

மற்றவர்களின் விமர்சனத்திற்குப் பயந்து இன்றுவரை உனது செய்கைகளின் விளக்கத்திற்கு நீ தீர்ப்பளித்து வந்திருக்கலாம். உனக்குத் தெரிந்தவை உனக்குத் தெரியும் என்பதை விசுவாசத்துடன் இன்று உணர்ந்து கொள். உனக்குத் தெரியும் என்பதை வெளிப்படுத்திச் செயற்படு. உனக்குத் தெரியும் என்பதை பயப்படாது சொல். மற்றவர்கள் நீ அறிந்தவற்றை உனக்குத் தெரியாதமாதிரி உனக்கு உணர்த்த முற்படும்போது உனக்குத் தெரிந்தவை உனக்கு நிச்சயம் தெரிந்தவை தான் என ஞாபகப்படுத்திக்கொள். நான் அறிந்தவை எனக்குத் தெரியும் என்பதை இன்று ஒத்து ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்கிறேன்.

1. என் வாழ்வில் நிஜமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் சில உண்மைகளை உதாசீனப்படுத்தாது, அவற்றிற்கு நான் முகங்கொடுக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ள இன்று முழுமனதுடன் உடன்படுகிறேன்.

அன்பானவர்களே! எமது வாழ்விலுள்ள உண்மைகளிற்கு முகங்கொடுக்காமலிருக்க, என்னென்ன கதைகள் காரணங்களைத் தேடிப்பிடித்து நாம் முன்வைக்கிறோம் என்பது வியப்பூட்டும் விஷயம்! "ஆரோக்கியத் திற்காகத்தான் குடிக்கிறேன்" எனச் சிலர் சொல்வார்கள். துன்புறுத்தப்படும் பெண்கள், அதை மறைக்க, மாடிப்படியில் தவறி விழுந்ததாகக் கூறுவார்கள். பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்துவது, அவர்களிற்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பதற்குத் தான் எனப் புளுகுவார்கள். நிஜங்களை மறுதளித்து, அலங்கோலத்திற்குள் அமர்ந்து அது அழகான இடம் எனச் சாதிப்பார்கள். மீண்டும், மீண்டும் மறுதளித்தல் எனும் எதிர்மறை ஆற்றினுள் எமது வாழ்க்கைப் படகு களைச் செலுத்தும் நாம், அந்த நீரிலிருந்து எழும் துர்நாற்றத்தைக் கண்களில் எடுத்துக் கொள்வதில்லை. "இந்த ஆற்றில் மீன் பிடிக்கலாமே" என சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு நாற்றமடிக்கும் அந்த இடத்திலேயே இருக்கவே முயற்சிப்போம். பிரச்சினை களை அல்லது அவை பாரதூரமான விஷயங்கள் தான் என ஒப்புக்கொள்வது எமக்குக் கஷ்டமான காரியமாதலால் தான், நாம் கெடுபிடி நிலைமைகளில் கண்மூடித்தனமாக அகப்பட்டு அவற்றை விட்டு விலகமுடியாமல் தத்தளிக்கிறோம்.

என்ன மாதிரியான பிரச்சினையா யிருந்தாலும், அதன் நிதர்சன உண்மையை ஒப்புக்கொள்ளாது மறுப்பது எமக்கு வரும் எந்தக் கஷ்டத்தையும் தீர்க்கக் கூடிய சக்தி படைத்தவர்கள் நாம், என்ற உண்மையை, எம்மை மறக்கப் பண்ணி விடும். எம்மால்

Thinking of Buying, Selling or Leasing Any Properties?

Just Call Justin

HOMELIFE HIGHER STANDARDS

Buy Or Sell Properties Thru Our "Real Team" And You Will Have A Chance To Win One Of Many Prizes**

Justin M.William
Sales Representative
416-803-7344

Asking: $459,000
Quality Monarch Built Detached House with 4+1 Brms. Finished Basement. Huge Back Yard.



Asking: $ 59,000
Grocery with Video, Gifts and Children Clothings All in one Store. High Demand Markham area. Best for a Family Business. Be your own Boss.

Asking : $149,900
3Bedrms , 2 Washrms, Well Maintained Building. Close To Everything

Asking :$ 300,000
3 Bedroom House with 3 Washrooms and unfinished Basement.

REAL TEAM

1st Prize
2007 Toyota Corolla CE

Lucky Draw Will Be Drawn On January, 2007

Asking: $ 339,900
Less Than 2 Years Old, Semi Detached Home with 3 Bedrms. Finished Basement. Lots of upgrades.

Asking: $ 545,000
Bovaird& Fernforest . Almost 4000 Sq Ft Detached House with 4+2 Bedrooms and Basement Apt.

Asking: $359,000
Less Than 2 Years Old Detached House with 3 Bedroom and Three washrms.

Asking : $ 308,900
3bedroom House with Finished Basement Apartment. Absolutley Gorgeous Property.

HomeLife GTA Realty Inc., *Brokerage, 1711 McCowan Road, Scarborough, On, M1S 3Y3 **Tel: 416-321-6969**

**some conditions may apply This is not intended to solicit the properties currently listed for sale. *Each office independently owned and operated Prizes may not be as illustrated

“பெற்றோர்கள் பார்க்கும் பெண்ணைத்தான் திருமணம் செய்துகொள்வேன்”

நேர்காணல்: நடிகர் சிறீகாந்

தமிழ் திரைப்படத்துறையில் மென்மையான பாத்திரங்களுக்கு நடிகர் மோகனுக்குப் பிறகு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கென்றே கடவுளால் அனுப்பப்பட்டவர் போல் இருக்கிறார் நடிகர் சிறீகாந்த். “பார்த்திபன் கனவு” திரைப்படத்தில் சிறீகாந்த் நடிப்பை பார்த்து அனைவரும் மிக முக்கியமான நடிகராக வருவார் என்று நம்பிக்கை தெரிவித்தார்கள். அந்த நம்பிக்கையை சிறீகாந்த் பொய்யாக்கவில்லை. இன்று தமிழ் முன்னணி கதாநாயகர்களில் இவரும் ஒருவர். “பார்த்திபன் கனவு” திரைப்படத்துக்காக தமிழக அரசு விருது இவருக்கு வழங்கப்பட்டது. சமீபத்தில் வெளியான இவரது “உயிர்” திரைப்படம் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருப்பதுடன் சர்ச்சைகளிலும் சிக்கிக் கொண்டுள்ளது. சென்னை - பாண்டிச்சேரி கிழக்கு கடற்கரைச் சாலையில் படப்பிடிப்பில் இருந்த சிறீகாந்தை “விளம்பரம்” பத்திரிக்கைக்காக சந்தித்தோம். படப்பிடிப்பின் நடு, நடுவே நம்மிடம் உரையாடினார். நடிகர் என்ற எந்த பந்தாவும் இல்லாமல் இயல்பாக பல விடயங்களை படப்பிடிப்பு நெருக்கடிக்கிடையில் நம்மோடு பகிர்ந்து கொண்டார்.

கேள்வி: இதுவரைக்கும் உங்க படங்கள் எதற்கும் இல்லாத அளவுக்கு சமீபத்தில் வெளிவந்த “உயிர் ” படத்துக்கு கடுமையான விமர்சனங்கள் வந்திருக்கிறதே. குறிப்பாக பாசமாக இருப்பதாக?

சிறீகாந்த்: உண்மைதான். ஆனால், பாசம் என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். இந்தப் படத்தின் கதையை இயக்குநர் சாமி என்னிடம் சொல்லி ஒரு வருடத்திற்கு மேலாகிறது. அப்போது, இந்த படத்தில் நடிக்க நான் ஒப்புக்கொள்ளவே இல்லை. காரணம் கதை. கதையைக் கேட்டதும் எனக்குள் ஒரு பயம். அதன்பிறகு என் குடும்பத்தினரிடமும் நண்பர்களிடமும் இந்தக் கதையை பற்றி விவாதித்தேன். அவர்களும் இந்த கதையில் நடிக்க வேண்டாம் என்றுதான் சொன்னார்கள். எனவே, நான் தெளிவாக மறுத்துவிட்டேன். பிறகு, ஒரு வருடம் சென்று மீண்டும் வந்தார் இயக்குநர் சாமி. இந்த முறை என்னை அவர் சம்மதிக்க வைத்ததுதான் ஆச்சரியம். “இந்தக் கதையில் அப்படி என்ன பாசம் இருக்கு? உங்க பாத்திரத்தை கடைசியில் நீங்கள் நடிக்கலாம். இந்தக் கதையை உருவாக்கும் போதே உங்களை மனதில் வைத்துதான் உருவாக்கினேன், எனவே தயதுசெய்து மறுக்காதீர்கள்” என்று சொன்னார். அவர் சொன்ன மாதிரியே, “உயிர்” படத்தில் அண்ணியை அம்மாவாகத்தான் நான் நினைக்கிறேன். அதை வலியுறுத்துகிற மாதிரி நிறைய வசனங்கள் படத்தில் இடம்பெற்றிருக்கிறது. இருந்தாலும் விமர்சனங்கள் வருகின்றன. இன்னொரு பக்கம் விமர்சனங்கள் இருந்தாலும், தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் திரையிட்ட அத்தனை ஊர்களிலும் இந்த படம் பெரும் வெற்றி அடைந்திருக்கிறது. எல்லா விமர்சனங்களையும் மீறிய இந்த வெற்றி எனக்கு புதிய தெம்பை கொடுத்திருக்கிறது. இந்த படத்தில் நடிப்பது நான் எடுத்த என்னுடைய துணிச்சலான முடிவை நானே பாராட்டிக் கொள்கிறேன்.

கேள்வி: இருந்தாலும் சிறீகாந்த திரைப்படம் என்றால் குடும்பத்தோடு போய் பார்க்கலாம் என்ற நம்பிக்கையை வைத்திருக்கும் உங்கள் ரசிகர்களுக்கு இது ஏமாற்றத்தை அளித்தது போல் இருக்காதா?

சிறீகாந்த்: படத்தின் கதை விவாதத்திற்கு உரியது என்பதை நான் மறுக்கவில்லை. மற்றபடி மருந்துக்கும் அதில் பாசம் இல்லை. உண்மையை சொல்லப் போனால் இந்த படத்தைப் பார்க்க வருகிற ரசிகர்களில் அதிகமானவர்கள் பெண்கள் என்பதுதான் உண்மை.

கேள்வி: நடிகை ஸ்நேகாவுடன் உங்களை இணைத்து தொடக்கத்தில் நிறைய கிசுகிசுக்கள் வந்தன. அதன்பிறகு இன்னொரு நடிகை. சமீபகாலமாக கொஞ்ச நாட்களாக கிசுகிசுக்கள் எதுவும் உங்களைப் பற்றி இல்லை. ஒரு வழியாக கிசுகிசுக்களில் இருந்து தப்பித்து விட்டீர்கள் போலிருக்கிறது?

சிறீகாந்த்: என்னுடைய ஒவ்வொரு படத்தின் கதாநாயகியுடனும் என்னை இணைத்து கிசுகிசு வந்து கொண்டிருந்த காலம் போயே போச்சு. முன்பெல்லாம் படப்பிடிப்பு தளத்தில் நடிகைகளுடன் ஜாலியாக அரட்டை அடித்துக் கொண்டிருப்பேன். உடனே பத்திரிகைகாரர்களும் வேண்டாதவர்களும் கிசுகிசுக்கத் தொடங்கிவிட்டார்கள். என்னைப் பற்றி வந்த கிசுகிசுக்களுக்கு இதுதான் காரணம். இப்போதெல்லாம், மிகவும் கவனமாக இருக்கிறேன். படப்பிடிப்பு தளத்தில் நடிகைகள் அருகே அமர்ந்திருந்தால்கூட அளவோடுதான் பேச்சு, பழக்கம் எல்லாம். வீட்டிலும் நிம்மதியாக இருக்கிறார்கள். எனக்கும் தேவையில்லாத டென்சன் இல்லை.

கேள்வி: அப்படியென்றால் உங்கள் வருங்கால மனைவி திரைப்படத்துறையை சார்ந்தவராக இருக்கமாட்டார், அப்படித்தானே?

சிறீகாந்த்: நிச்சயமாக. வீட்டில் யாரைப் பார்த்து திருமணம் செய்து கொள்ள சொல்கிறார்களோ, அவர்தான் என் மனைவி. என் பெற்றோர்களையும் அன்போடு பார்த்துக் கொள்கிறவராக அவர் இருக்க வேண்டும். இதுதான் மனைவி குறித்த என் அதிகபட்ச ஆசை. இந்நேரம் எங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாரோ, திருமதி சிறீகாந்த்?

கேள்வி: தற்போது நடித்துக் கொண்டிருக்கும் “கிழக்கு கடற்கரைச் சாலை” திரைப்படத்தை பற்றி?

சந்திப்பு: சிவதானு

சிறீகாந்த்: என்னுடைய மக்கள் தொடர்பாளர் அந்தணன் தயாரிக்கும் படம் இது. “சித்திரம் பேசுதடி” படத்தின் மூலம் அறிமுகமான பாவனாதான் இந்த படத்தின் கதாநாயகி. “ஏப்ரல் மாதத்தில்” , “மெர்க்குரிப்பூக்கள்” ஆகிய இரண்டு படங்களில் என்னோடு இணைந்த இயக்குநர் எஸ். எஸ். ஸ்டான்லிதான் இப்படத்தின் இயக்குனர். இதுவரைக்கும் நான் நடித்த படங்களிலேயே அதிக பொருட்செலவில் இந்த படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த படத்தின் வெளியீட்டுக்குப் பிறகு, நான் எந்த இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஏங்கினேனோ, அந்த இடத்தை பிடித்திருப்பேன் என்று உறுதியாக நம்புகிறேன். அப்படி ஒரு சூடான, சுவையான கதை. கஸ்ட் இறுதியில் படத்தை வெளியிடுகிற திட்டம் இருக்கிறது.

கேள்வி: உங்களுக்குப் பிறகு அறிமுகமான ஆர்யா, பரத் போன்றவர்கள் பாலா, விக்ரமன் போன்ற பெரிய இயக்குனர்கள் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் இன்னும் பெரிய இயக்குனர்களோடு கூட்டணி சேரவில்லையே?

சிறீகாந்த்: சினிமாவில், அதுவும் தமிழ் திரைப்படத்துறையில் எப்போதுமே அதிர்ஸ்டத்திற்கும் ஒரு பங்கு இருக்கிறது. என்னை அழைக்கமாட்டாரா என்று எல்லாரையும் ஏங்க வைக்கும் இயக்குனர் மணிரத்தினம் அவர்கள் அழைத்தும் என்னால் நடிக்க முடியாமல் போனது. அவருடைய படத்தில் நடிக்க ஒப்பந்தமான போதுதான் தீ விபத்தில் சிக்கினேன். ஒருவேளை அந்த வாய்ப்பு கை நழுவி போகாமல் இருந்திருந்தால் என் வாழ்க்கையின் போக்கே மாறியிருக்கலாம். பல வருடங்கள் போராடிய பிறகுதான் விக்ரம் என்ற நடிகருக்கு ரத்தின கம்பளம் விரித்தது தமிழ் சினிமா. வாய்ப்புகளும் வெற்றியும் வரும்போது வரும். அது வரட்டும் என்று காத்திருக்காமல் அதை நோக்கி ஓடுவதுதான் புத்திசாலித்தனம். நான் அதை நோக்கிதான் ஓடிக் கொண்டிருக்கிறேன். ஒருவேளை நீங்கள் அடுத்த முறை என்னைப் பேட்டி காண வரும்போது இதுபோல் ஒரு கேள்வி எழுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகலாம்.

கேள்வி: ஒவ்வொருமுறையும் உங்கள் படம் வெளியாகும்போதும், சிறீகாந்த் தன் சம்பளத்தை விட்டு கொடுத்துவிட்டார் அல்லது சில லட்சங்கள் உதவி செய்தார் என்றெல்லாம் செய்திகள் வருகிறதே?

சிறீகாந்த “போஸ்” படத்திலிருந்த துவங்கியது இந்த பிரச்சனை. அந்த படத்தின் ரிலீஸ் நேரத்தில் இருபது லட்சம் ரூபாயை தயாரிப்பாளருக்குக் கொடுத்தேன். அப்படி கொடுத்தால்தான் அந்த படம் ரிலீஸ் ஆகும் என்ற நிலை. அதன் பின் தயாரிப்பாளருக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் என் சம்பளத்தின் ஒரு பகுதியாக சென்னை நகர விநியோக உரிமையை வாங்கிக் கொள்ள ஆரம்பித்தேன். இப்போதும் “சதுரங்கம்” ரிலீஸ் ஆவதில் பிரச்சனை என்பதால் நான் வாங்கிய மொத்த சம்பளத்தையும் திரும்ப கொடுத்துவிட்டேன். சினிமாவிலிருந்து சம்பாதித்ததை திரும்பவும் சினிமாவுக்கே கொடுப்பதில் என்ன தவறு. ஆனாலும் “சதுரங்கம்” ரிலீஸ் தள்ளி போவதால் எனக்கு வருத்தமே.

சுயாதீன கலை திரைப்பட மையம் - ரொரன்ரோ - கனடா

ஐந்தாவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா-செப்ரெம்பர் 16, 2006

Fifth International Tamil Short Film / Documentry Festival

September 16, 2006

Last date for the submission is August 20,2006
Contact 416-450-6833 or 416-857-6406
Independent Art Film Society of Toronto

வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

Kanthan: 416.291.3997

• No Spraying • No Smelling • No Moving

ELECTRICAL WORKS

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880

MORTGAGE

• Good / Bad Credit • Refinance
• 0% Down • Self Employee

உங்கள் சகலவிதமான Mortgage தேவைகளுக்கும் அழையுங்கள்

தொடர்புகளிற்கு: மகா: 416.871.4151

மல்லிகை ஜீவாவை சந்திக்க வைத்த கதை

செழியனின் நாட்கள் - 3

இம்முறை ஒரு வினாடியில் கதையை தேடி எடுத்தார் பெருமாள். கதைக்குள் இரண்டு நிமிடம் விழுந்து காணாமல் போனார்.

பிறகு மெதுவாக தத்தளித்து எழுந்து என்னைப்பார்த்தார். அவருடைய கண்களில் கண்ணீர் வந்துவிட்டது போல எனக்குத் தோன்றியது.

அவர் அழுவது நிச்சயம் என்று தெரிந்தது.

அவர் அழுதால் என்ன செய்வது?

ஓர் அழகான பெண் அழுதால் தலையை தடவிக் கொடுக்கலாம். அல்லது முதுகை வருடிவிடலாம். கொஞ்சம் மனத்தையிரியம் இருந்தால் கண்ணீரைத் துடைத்து, கன்னத்தையும் வருடிவிடலாம். ஆனால் பெருமாள் அழுதால் என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. கதையையும் கைவிட்டுவிட்டு ஓடிப்போய் விடலாமா என்று யோசித்தேன்.

அதற்குள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பெருமாள் என்னை மேலும் கீழும் பார்த்தார்.

“கதை நல்லா இல்லையா?” ஆதங்கத்துடன் கேட்டேன்.

“இல்லை ‘அப்பிடி ஒன்னும் கிடையாது’ .ஆனால்,” என்று சொல்லி நிறுத்தி விட்டு மறுபடியும் கதைக்குள் புகுந்து காணாமல் போய்விட்டார்.

“ஒரு சாத்தான் வேதம் ஓதுகின்றது ‘..ம்’ கதை எழுதியிருக்கிறீங்க, ஆனா இது ஈழநாடு பத்திரிகையில போடக்கூடியதாக இல்லை, நீங்க ஒன்னு பண்ணுங்க செழியன், ..மல்லிகையில இதை கொடுத்துப் பாருங்க அதில போடக்கூடிய கதை இது.”

ஏதோ என்னுடைய மனம் நோகக் கூடாது என்பதற்காக பெருமாள் சொல்லுகின்றார் என்று எனக்குப் பட்டது. மல்லிகை அலுவலகம் எங்கே இருக்கின்றது என்கின்ற விவரத்தையும் பெருமாளே சொன்னார்.

மிகுந்த சோர்வுடன் எழுந்து எனது இரண்டு கரங்களையும் நீட்டினேன், எனது கதையை மீளப் பெற்றுக் கொள்வதற்காக. அந்த கைகளுக்குள் எனது சிறுகதையை பெருமாள் தரவில்லை.

“நீங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கிறீங்க?”

“படிச்சுக் கொண்டிருக்கிறன்”

“எந்த ஊர் என்னு சொன்னீங்க?”

“உரும்பராய்”

“ஓ! அப்பிடியா?.... எங்களுக்கு அந்த ஊரில நிருபர் கிடையாது. நீங்க வேணும்னா ஈழநாடு நிருபராக இருங்களேன்”

சிறுகதை பிரசுரமாயிருந்தால் வந்திருக்கக் கூடிய சந்தோசத்தை விட ஓர் அங்குலம் அதிக சந்தோசமாக இருந்தது. பெரிய பெரிய தலைவர்கள் பிறந்த மண். அந்த மண்ணில் இருந்து செய்திகளை அனுப்ப ஒரு நிருபர் கிடையாது என்ற மனக்குறையை உடனே தீர்க்க வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

“நிருபராக வேண்டுமென்றால் நான் என்ன செய்ய வேண்டும்?”

“உங்க விவரத்தை தாங்க, வாற புதன் கிழமை என்னை வந்து பாருங்க. உங்களை நிருபரா நியமனம் செய்த கடிதத்தை தயார் பண்ணி வைக்கிறன்.”

அடுத்த பத்தாவது நிமிடம் மல்லிகை அலுவலகத்தில் இருந்தேன்.

சிறுநீர் கழிப்பதற்காக பயன்படுத்தப்படக் கூடிய ஒரு நல்ல திறமான ஒழுங்கை. இருண்டு போனது போல இருந்த சிறு இடத்தில் மல்லிகை அலுவலகம் இருந்தது.

கறுப்பு மையை கைகளிலும், முகத்திலும், சட்டையிலும் தடவி, முரடர் போல ஒருவர் அங்கிருந்தார்.

“ஆசிரியரை சந்திக்க வேண்டும்” என்று தயங்கித் தயங்கிக் கூறினேன். நான் தான் அது என்று அவர் கூறிவிடுவாரோ என்று எனக்குப் பயமாக இருந்தது.

“ஆசிரியர் இல்லை. ஏதாவது விசயமா?”

“இந்த சிறுகதையை மல்லிகையில் பிரசுரிப்பதற்காக கொண்டு வந்தனான், ஆசிரியர் எப்ப வருவார்?”

“அவர் நாளைக்குத்தான் வருவார். நீங்க அதை இந்த மேசையில வைச்சிட்டுப் போங்க. நான் அவர் வந்ததும் கொடுக்கிறன்.”

மனதுக்குள் அவநம்பிக்கையாக இருந்தது. இவர் எனது கதையை மல்லிகை ஆசிரியரிடம் கொடுப்பாரா? அல்லது அந்தக் கதையை தனது கதை என்று பிரசுரித்து விடுவாரா என்று எனக்குள் சந்தேகமாக இருந்தது.

சரி நடப்பது நடக்கட்டும் என்று கதையை ஆசிரியரின் மேசையில் மிக கவனமாக வைத்து விட்டு வீடு திரும்பினேன்.

ஒரு வாரம் கழிந்தது. கடுமையான வெய்யில் நேரம். மல்லிகை ஆசிரியரை சந்திப்பதற்காகச் சென்றேன்.

வெள்ளை வேட்டி, சட்டையுடன் வேர்த்து, விறுவிறுத்து ஒருவர் அமர்ந்திருந்தார்.

ஆசிரியை சந்திக்க வேண்டும் என்றதுமே எந்தவித சிரிப்பு, புன்முறுவல், மகிழ்ச்சி எதுவுமே இல்லாமல் “சொல்லுங்கள்” என்றார். முகத்தை ஏறிட்டும் பார்க்கவில்லை. பெருமாளைப் போல எனக்காக அழுது விடக்கூடாது என்ற முடிவில் இருந்திருப்பார் போலத் தெரிந்தது.

ஏன் இவர் இப்படி இருக்கின்றார் என்று எனக்குள் கேள்வி முளைத்து எழுந்து, வளர்ந்து பூதாகரமாய் ஆகியது. பின்னர் ஒரு காலத்தில் அதற்கு விடை கிடைத்தது. இந்த சிறு சஞ்சிகை ஆசிரியர்கள் எல்லாருமே இப்படித்தான் என்று. அவர்களுடைய பிரச்சினை அடுத்த இதழை எப்படிக் கொண்டுவருவது என்பதே. இடையில் சிரிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை.

எனது சிறுகதையை கையில் எடுத்து ஒரு நோட்டம் விட்டார். என்னை நிமிர்ந்து பார்க்கவேயில்லை. இரண்டு தடவை தண்ணீர் குடித்தார்.

“படிச்சுப்பார்த்தீங்களா?” ஒரு சந்தேகத்துடன் கேட்டேன்.

“ம் ‘.படிச்சுப்பார்த்தேன்’ .. நீங்க இந்தக் கதையை ஈழநாட்டுக்கு கொடுத்துப்பாருங்க, அதில பிரசுரிப்தற்கு வாய்ப்பு உண்டு” என்று எனது கதையை என்னிடம் நீட்டினார்.

விக்கிரமாதித்தனின் தலை சுக்கு நூறாகி இருந்தால் எனது மனதைப் போலத்தான் ஆகியிருக்கும்.

தலைக்கு மேல் சூரியன் நின்று கொண்டிருந்தான். வியர்வை வழிந்து ஓட யாழ்பாணத்தில் இருந்து பலாலி வீதியால் எதிர் காற்றில் சைக்கிளை மிதித்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தேன்.

மனதுக்குள் அடுத்த கதை தயாராகிக் கொண்டிருந்தது.

• • • • •

நல்ல மனம் வேண்டும்

மனத்தானாம் மாண்பு. மனம் கள்ளம் கபடமற்றதாக, தூய்மையானதாக இருந்தால் தான் உடலும் உயிரும் உய்திபெறும். உள்ளத்தில் கள்ளம் புகுந்து விடும் போதுதான் சோதனைகளும் வேதனைகளும் ஏற்பட்டு விடுகின்றன. உறுதியான உடலும் உயர்வான உள்ளமும் வாய்க்கப் பெற்றால் வாழ்க்கை வெற்றி பெறும். தூய்மையான உள்ளம் உமைபங்கன் உவந்து உறையும் இடம் என்பது கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் கருத்து.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

நா. க. சிவராமலிங்கம்

வள்ளுவர் ஒருபடி மேலே சென்று உள்ளத்தனையது தான் உயர்வு என்று உணர்த்தியருளியுள்ளார். எனவே ஒருவரின் உயர்வு அவரின் எண்ணத்தின் அடிப்படையிலே தான் அமைகிறது. அந்த எண்ணங்களின் பிறப்பிடம், இருப்பிடம், இறப்பிடம் எல்லாம் மனமே தான். எனவே அவற்றைப் பொறுத்ததே உயர்வு. களவு, பொய், காமம் இவற்றை உள்ளத்திலிருந்து கழித்து விடுங்கள். அரசியல் அழுகல்களையும் சினிமா சொத்தைகளையும் உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்துங்கள். தூய எண்ணங்களை உள்ளம் முழுவதும் நிரப்புங்கள். அப்பொழுது உயர்வு உங்களைத் தேடிவரும். உள்ளத்தை வைத்தே உலகம் உங்களை மதிப்பிடுகின்றது. நாள்தோறும் ஒரு கல்லை சிவபெருமான் மீது விடாது எறிந்தார் சாக்கியர். அவர் நாயனார் என்று மதிக்கப்பட்டார். சிவனை வணங்கவே கல்லை எறிந்ததினால் அவர் மதிப்புப்பெற்றார். ஆனால் மன்மதன் சிவபெருமானை காமவயப்படுத்த மலர்களை வீசினான். அவன் எரிக்கப்பட்டான். ஏன் இரண்டிற்கும் பின்னாலுள்ள மனமேதான் காரணம்.

இளம் துறவிகள் இருவர் ஆற்றோரம் நடந்து சென்றார்கள். கால்தவறி ஆற்றில் விழுந்த கன்னி ஒருத்தி உதவி உதவி என்று அலறியபடி தண்ணீரில் மூழ்கினாள். காவி உடுக்கும் போதே பெண்களை கனவிலும் நினையாதே என்று மடத் தலைவர் சொன்னதை நினைத்து முதல் துறவி அவனை காப்பாற்றத் தயங்கினார். ஆனால் அடுத்தவர் இதையெல்லாம் நினைக்காமல் திடீரென ஆற்றில் பாய்ந்து பெண்ணை கரை சேர்த்து முதல் உதவி அளித்து கண் திறக்க வைத்தார். கண்விழித்தவள் நன்றி என்றாள். நல்லது தாயே வருகிறேன் என்று புறப்பட்டார்.

இவற்றையெல்லாம் பார்த்த முதல் துறவி இளம் பெண்ணை எப்படித் தொடலாம். ஐயோ! தப்பு தப்பு என்றார். இரண்டாமவர் பேசவில்லை. ராம், ராம் என்றபடி நடந்து கொண்டேயிருந்தார். முதல் துறவி விடுவதாக இல்லை. ஆச்சிரமம் வரும்வரை இது பற்றியே புலம்பினார். ஆச்சிரமம் வந்தபின்னும் முதலாமவரின் புலம்பல் நின்றபாடில்லை. பெண்ணைத் தொட்டான். தோளில் தூக்கினான். தலைக்கு மேலே சுழற்றினான் என்றெல்லாம் ஆச்சிரமத் தலைவரிடம் புகார் செய்தார். ஆச்சிரமத்தை விட்டு வெளியே போ என்று முதல் துறவியை ஆச்சிரமத் தலைவர் உத்தரவிட்டார். ஐயையோ அவனல்லா அவளைத் தொட்டுத் தூக்கித் தவறு செய்தவன் என்று கதறினார். அவன் அந்தப் பெண்ணைத் தொட்டுத் தூக்கியது உண்மை. ஆனால் ஆற்றங்கரையிலேயே இறக்கி விட்டுவிட்டான். ஆனால் நீயோ அவளை ஒருமணி நேரம், ஆச்சிரமம் வரும்வரை சுமந்து இங்கே கொண்டு வந்திருக்கிறாய். அவன் உடம்பால் சுமந்தான். நீ தான் உள்ளத்தால் நீண்ட நேரம் சுமந்த பாவி என்று குரு கூறினார்.

உள்ளத்தை வெள்ளையடியுங்கள். அப்பொழுது உள்ளொளி உங்களுக்கு ஏற்படும். உள்ளம் தான் வாழ்க்கையின் சூத்திரதாரி. அதை ஒரு போதும் மறவாதீர். விண்ணாளும் வேந்தன் வீடு செல்லும் காலம் வரை எண்ணுவன் நல்லவனாய் எண்ணுங்கள் இயங்குங்கள் துன்பமில்லை.

MENDOZA'S DEBT / FINANCIAL CONSULTANT

Financial Problems?

